தமிழ்ப் பொழில்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௩௨	திருவள்ளுவர் யாண்டு ௲௯௮௮ துன்முகி, பங்குனி 1957 மார்ச்சு, ஏப்ரல்.	மலர் ௰௨

பாராட்டற்குரியது

(பேராசிரியர் ஔவை. சு. துரைசாமி. மதுரை)

உலக வாழ்வில் இன்றைய நிலை பெரிதும் வியந்து யாவரும் விரும்பும் சிறப்புடையதாகும். மக்களினத்தின் விஞ்ஞான அறிவு மிகவும் வளர்ந்திருக்கிறது. லுகாம்தே தூனாய் என்பவர் கூறுவது போல இன்று காலத்தாலும் இடத்தாலும் பிரிந்து நிலவுலகின் மூலை முடுக்குகளில் வாழ்பவர் அனைவரும் மிக்க அண்மையில் நெருங்கியுள்ளனர். பல்லாயிர மைல்களுக்கு அப்பாலுள்ள நாடுகளில் வாழ்பவர் வானவூர்திகளாலும் வானொலியாலும் தொலைபேசிகளாலும் ஓர் ஊரில் வாழ்பவர் போலவும் ஒரு வீட்டில் வாழ்பவர் போலவும் போக்கு வரவு புரிந்தும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டும் வாழ்கின்றனர். புராண இதிகாசங்களிலும் கற்பனைக் கதைகளிலும் மக்கள் இவ்வாறு போக்கு வரவு புரிந்ததாகப் படித்திருக்கிறோம். பெரியோர் ஞானக்கண் கொண்டு நெடுந்தொலைவில் நடந்த நிகழ்ச்சிகளை அறிந்து கொண்டதாக அந்நூல்கள் கூறுகின்றன. அக்கற்பனைக் காட்சிகள் இன்று உண்மை நிகழ்ச்சியாய் நம்முன்னே நிகழ்வதைப் பார்க்கிறோம்.

பண்டை நாளில் வாழ்ந்தோர் மண்ணுலகத்துக்கும் தேவருலகத்துக்கும் போவதும் வருவதும் செய்து வந்தனர் என்று அந்தப் பழைய நூல்கள் நவலுகின்றன. அவற்றைத் தான் இன்று நம்மால் காணமுடியவில்லை. ஆனால் இக்கால விஞ்ஞானிகள் வானத்தில் தோன்றும் கோள்களைக் கண்டு அங்கே போய் வர நினைக்கின்றனர். மண்ணுலகத்தில் மக்கள், விஞ்ஞானக் காட்சியால் கண்ட கருவிகளின் வாயிலாக அக் கோள்களின் தொடர்பு பெற முயன்று வருகின்றனர். இயற்கையின் அகத்தே நுழைந்து அதன் நுட்பங்கள் பலவற்றை அறிந்து கொள்ள முயன்று பெற்ற வெற்றியாலும் அறிவுக்காட்சியாலும்

இம்முயற்சிகளில் காலப்போக்கில் வெற்றி பெறுவர் என்று உறுதியாகக் கூறலாம்.

ஒரு காலத்தில் மக்கள் பலரும் நிலம் நீர் காற்று முதலிய எல்லாவற்றிற்கும் முதற்காரணம் அணு என்றே கூறிவந்தனர். வைசேடிகர் முதலிய சமயக் கணக்கர் எல்லாவற்றுக்கும் காரணம் அணு என்றுதான் இசைத்துள்ளனர். இன்று அணுவைத் துளைத்து உடைத்து அதற்கு முதற்காரணம் ஆற்றல் (சக்தி) என்ற முடிவுக்கு விஞ்ஞானம் வந்திருக்கிறது. சிவநெறிக்கண் நின்ற பண்டையோர், எல்லாவற்றுக்கும் முதற்காரணம் மாயை என்ற ஓர் ஆற்றல் கூறி, மாயை என்ற சொல்லையும் மாய்+தல், ஆ+தல் என்று பிரித்து இரண்டிற்கும் பொதுவாய் நிற்கும் தல் என்னும் விகுதியை நீக்கி, மாயா எனக்கூட்டி உலகு ஒடுங்குதற்கும் மீளத் தோன்றுதற்கும் காரணமான – இன்னதென்று அறிய வராத – ஆற்றல் என்று இயம்பினர். இன்றைய அணு விஞ்ஞானிகளும் அணுவுக்குள் அடங்கி இன்னதென்று அறிய வராமல் இருக்கும் ஆற்றல் (Unknown energy) தான் அதன் ஆக்கத்துக்குக் காரணம் என்று கண்டு உள்ளனர். இவ்வாராய்ச்சிகளால் முன்பு கற்பனை நிலையிற் கண்ட காட்சிகளும் காட்சிக்கு அகப்படாதவை எனக் கைவிட்டவையும் கண்கூடாக வைத்து ஆராயப்படுவதை நாம் அறிகிறோம். இங்க அறிவால் இன்ன தன்மையதென்று எந்த அறிவியற் புலவராலும், உயிர்நூற் புலவராலும் காணப்படாமல் நமது உடலுக்குள் நிலவும் உயிரையும் அதற்கு உள்ளீடாகிய பரம்பொருளையும் நாம் காண்டல் கூடும் என்ற நம்பிக்கை மக்களினத்துக்கு இப்போது உண்டாகி இருக்கிறது.

உலகு உயிர்களின் இயல்பையும் இவற்றிற்கு அப்பாற்பட்ட முழுமுதற் பொருளையும் காணமுடியும் எனத் துணிவு கொள்ளும் மக்களினத்துக்கு வாய்த்த கருவியாக இருப்பது விஞ்ஞானக் கல்வி (Scientific Education) என்பதை அறிவுடையோர் மறுக்க முடியாது. இக்கல்வி வளமுற வளர்ந்திருப்பது மேனாடுகளிலும் அமெரிக்காவிலும் என்பதை நாம் அறிந்திருக்கின்றோம். அந்நாடுகளுள்ளும் உருசிய மொழி வழங்கும் உருசியாவும் ஆங்கில மொழி வழங்கும் அமெரிக்காவும் இத்துறையில் முன்னேறியுள்ளன. அதனால் "நாடு என்ப நாடா வளத்தன" என்ற திருக்குறளுக் கொப்பப் பொருள் வளத்தாற் செல்வமும் சிறப்பும் சிறக்கப் பெற்றுத் திகழ்கின்றன. ஏனை இங்கிலாந்து, பிரான்சு, செர்மனி முதலிய நாடுகளும் கிழக்காசியாவிலுள்ள சப்பான் நாடும் ஓரளவு முன்னேறிப் பொருள்வளம் பெற்றுப் பொலி

கின்றன. நமது நாடும் இத்துறையில் முயன்று வருகின்றது. இம் முயற்சியில் நல்ல வெற்றி காண்பதற்கு அறிவியற் கல்வியும் கலைகளும் நாட்டவர் உள்ளத்தில் நன்கு பரவ வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும்.

இந்த அறிவியற் கலையும் கல்வியும் நமது நாட்டு மொழிகளில் பெறுதற்கு வாய்ப்பில்லை. இவற்றை அறிந்துகொள்ளுதற்கு இன்று ஆங்கில மொழிதான் சிறந்த வாயிலாக இருக்கிறது. ஆங்கில மொழி நமது நாட்டிற் பரவக் கால் கொண்டது ஒரு நூற்றைம்பது ஆண்டுகட்டு முன்புதான். அதனை முதற் கண் புகுத்தியபோது நமது நாட்டை ஆண்டவர் ஆங்கிலேயர். அவர்கள் தமது ஆட்சியைத் தமக்குத் தெரிந்த மொழியில் நடத்துதற்கு நம் நாட்டு மக்களில் கற்றவரைத் துணைக்கொள்ள வேண்டியவராயிருந்தனர். தாம் சொல்வதை அறிந்து எழுதவும் சொல்லவும் கூடிய ஆங்கில அறிவு நம்மவர்க்கு உண்டாகும் வகையில் கல்வி முறையை வகுத்தனர். அந்த வழியிலேயே நெடுங்காலம் கழிந்தமையின் அவர்களால் அறிவியல் அறிவு (Scientific knowledge) பெற்று ஏனை நாட்டு உரிமை மக்களைப்போல அறிவியற் புலவராய் (Scientists) விளக்கம் பெறும் நல்லுதவி நம்மவர் பெறாராயினர். அவர்கள் தந்த ஆங்கில மொழியறிவு பெருகியபோது அரசியல், வாணிகம், நீதி மன்றம் ஆகிய துறைகள் யாவும் ஆங்கில மொழியில் நடைபெறலாயின. கல்வியின் குறிக்கோளும் அரசியல் முதலிய மூன்று துறையிலும் வேலைபெற்று அதனால் எய்தும் ஊதியங் கொண்டு வயிறு வளர்ப்பது என்று மாறுவதாயிற்று. இதற்கேற்ற வகையில் அமைந்த கல்வியும் ஆங்கிலத்தில் நடைபெறத் தொடங்கியது. கற்போர் வேலை எதிர்பார்த்த துறைகளுள் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் தொழிலும் ஒன்றாயிற்று. இவ்வாற்றால் நம் நாட்டில் கற்பதற்கும் வேலை தேடி வயிறு வளர்ப்பதற்கும் உரியது ஆங்கிலமே என்ற எண்ணம் மேலிட்டது. நாட்டு மொழிகள் வாழ்க்கைக்குத் துணையாகா என வெறுத்துப் புறக்கணிக்கப்பட்டன.

ஆங்கிலேயருடைய ஆட்சி நிலைபெறுமுன் தமிழகத்தில் அரசு நிலையின்மையும் போர் அச்சமும் எங்கும் நிலவின. அதனால் மக்களிடையே அமைதியான வாழ்வு இல்லாதொழிந்தமையால் வறுமையும் பிணியும் கல்லாமையும் நாட்டிற் பெருகியிருந்தன. ஆங்கிலேயர் ஆட்சி நிலைகொண்டதும் போர் அச்சம் ஒழிந்தது. வாழ்வில் மக்கட்கு ஓரளவு அமைதி தோன்றிற்று. பொருளும் வாணிகமும் தொழில்களும் தொன்று தொட்டு வந்த

முறையில் உயிர்ப்புப் பெற்றன. அதுகண்ட மக்கள் அரசினர் மனமகிழத்தக்க வகையில் தங்கள் வாழ்க்கையை நடத்த முற்பட்டனர். தமக்கென ஒன்று இன்றித் தமக்கு வேண்டுவனவற்றைச் சிந்திப்பதும் அரசினர் செயல் எனத் தேர்ந்து அவர்கட்கு முழுத்த அடிமையாயினர். அரசின் செல்வாக்குப் பெற்றோருடைய சொல்லும் செயலுமே அவர்கட்கு வழிகாட்டியாயின. இடைக்காலச் சோழ பாண்டியர் காலத்தில் இல்லாத சாதி வேற்றுமைகள் புது முறையில் தோன்றி மக்களை அக்கு வேறு ஆணி வேருகப் பிரித்தொழிந்தன. கல்வியும் செல்வமும் செல்வாக்குடையோரிடமே இருந்து வரலாயின.

நாளடைவில் ஆங்கிலேயர்களுக்குத் தம்மால் ஆளப்படும் மக்களிடையே காணப்படும் கல்லாமை, வறுமை, வேற்றுமைகள் தெரியவந்தன. இந்த மக்களை ஆங்கிலேயரினும் சிறந்த ஆங்கிலப் பான்மையுடையராக்க வேண்டும் என்ற எண்ணம்கொண்டு ஆங்கில மொழியறிவை முன்னையினும் சிறிது மிகுதியாகப் பரப்ப முயன்றனர். ஆங்கில மொழியிற் காணப்படும் அரசியல், வாணிகம், விஞ்ஞானம் முதலிய கலைகளை நம்மவர்க்கு வழங்கினர். மருத்துவம், பொறியியல் முதலிய கலைகளும் நாட்டு வரலாறு, பொருளாதாரம், மெய்யுணர்வு (Philosophy) முதலியனவும் வந்து புகுந்தன. இதனால் அவர்கள் ஆட்சியில் கல்வி முறையிற் குற்றம் குறைகள் இல்லை என்பது கருத்தன்று. அவற்ருல் நமது முன்னேற்றம் தடைப்பட்டது உண்மை. ஆயினும், அவர்பால் பெற்ற நலங்களால்—அவருடைய மொழிப் பயிற்சியால் – இன்று நாமும் ஓரளவு கலைஞர்களாய் விளங்குகிறோம்.

இத்தனைக் கலைகளும் கலையுணர்ச்சிகளும் நிறைந்து இன்று உலகப் பொது மொழியாக ஆங்கில மொழி இடம் பெற்றுவிட்டது. ஆங்கிலேயரை வெறுப்பவரும் அவர்களுடைய ஆங்கில மொழியின் கலைவளம் கண்டு அதனைப் பெரிதுங் காதலித்துக் கற்கின்றனர். அதற்கு அச்சிறப்பு எங்ஙனம் உண்டாயிற்று?

ஆங்கிலேயருடைய நாடு மேலை நாட்டுக் கடற்கண் உள்ள சிறு தீவு என்பது யாவரும் அறிந்தது. மேலும் அது குளிர் மிகுந்து ஓராண்டில் பலதிங்கள் வெளியே செல்ல முடியாதவாறு பனியுறைந்து கிடக்கும் இயல்பினதாகும். அக்காலத்தே அவர்கள் தங்கள் மனைகளில் அடைபட்டுக் குளிர் காய்ந்து கொண்டும் தனியே இருந்து சிந்தித்துக் கொண்டும் இருப்பர்.

இவ்வியல்பால் குளிர்காலத்துக்கெனப் பொருளீட்டுவது அவர்கட்கு இயற்கை வேட்கையாயிற்று. குளிர்காயும் நெருப்புக்கு விறகு தேடப் புகுந்த சிந்தனை அவர்களை நிலத்தைக் குடைந்து நிலக்கரி காணச் செய்தது. நிலக்கரிக்குப் பின் நீராவி கண்டனர்; புகை வண்டி விடுத்தனர். இடையிடையே இவற்றுக்கு வேண்டும் கருவிகளையும் படைத்தனர்.

உணவுக்கும் உடைக்கும் உரிய பொருள்மேற்சென்ற அவர்கள் விருப்பம், ஏனைப் பெருநாடுகளிற் பெறலாகும் பொருள் நலமெல்லாம் தாமும் பெறவேண்டுமென்ற வேட்கையாக மாறிற்று. அதனால் கடலிற் கலம் செலுத்தி வேறு நாடுகட்குச் சென்று பொருளீட்டும் செயலை மேற்கொண்டனர். வேறு நாடுகட்குச் சென்றபோது அந்த நாடுகளின் இயற்கையமைதிகளையும் காலநிலைமைகளையும் ஆங்கு வாழும் மக்களினத்தின் பண்பாடுகளையும் அறிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர்.

இவ்வகையில் அவர்களுடைய உலக அறிவும் பொருளறிவும் பெருகவே போக்கு வரவுக்கும் பொருள் செய்தற்கும் வேண்டப்படும் பொருளும் கருவிகளும் மிகுதியும் உண்டாயின. அவற்றால் அவர்களுடைய மொழியிலுள்ள சொற்களும் பலவாய் வளர்ந்து பெருகத் தலைப்பட்டன. அவர்களைப்போலவே அவர்கள் வாழும் கடலின் கரையிலுள்ள நாட்டினரான ஐரோப்பியர் பலரும் பொருள்வேட்கையும் அதுவே வாயிலாக நாடுகாணும் நாட்டமும் கொண்டு கடலில் திரிவாராயினர். அவர்களாலும் பற்பல புதுப் பொருட்கள் காண்டலும் புதுக் கருவி படைத்தலும் உண்டாயின. நாளடைவில் அவைகள் அவர்களிடையே விரவத் தொடங்கின. இவ்வாறு தோன்றி வளர்ந்ததன் பயனே இன்று நாம் ஆங்கிலத்திற்காணும் கலைப் பெருக்கமாகும்.

வாழ்க்கை நலமும் அதற்கு இன்றியமையாத பொருள் வேட்கையும் கொண்டே வேறு நாடுகட்குச் சென்றாராயினும், தங்கள் நாட்டோடு ஒத்த இயற்கைச் சூழ்நிலையமைந்த நாடுகளில் குடியேறுவதிலும் அவர்கள் பின்வாங்கவில்லை. நல்ல காலத்தின் சூழியாக ஆங்கிலர் நாட்டில் சமயக் கொடும்பூசல் ஒன்று சுமார் நானூறு ஆண்டுகட்கு முன் தோன்றிற்று. வலியார் பலர் எளியாரைத் துன்புறுத்தினர். அவர்கள் கடல் கடந்து அமெரிக்கா முதலிய நாடுகளிற் குடியேறினர். இவ்வாறே பலர் ஆப்பிரிக்காவின் தென் பகுதியிலும் ஆத்திரேலியாவிலும் அமெரிக்காவின் வட பகுதியிலும் குடியேறி ஆங்கிலம் வழங்கும் நாடுகளை அமைத்துக்கொண்டனர்.

இவ்வாறு நிலவுலகு முற்றும் பொருள் வேண்டியும் இடம் வேண்டியும் திரிந்த ஐரோப்பியர்பால் அரும் பண்பு ஒன்று அமைந்திருந்தது. தாம் தம் இயற்கையறிவாலும் வாழ்க்கை வாயிலாலும் கண்ட காட்சிகளை எழுதிவைப்பதும் ஒளிவு மறைவின்றிப் பிறர்க்குரைப்பதும் ஐரோப்பியரிடம் அந்நாளில் நன்கு அமைந்திருந்த செயல்களாகும். அவற்றோடு தாம் காணும் இயற்கை நலங்களையும் கண்டு பயிலும் மக்களுடைய பண்பாடுகளையும் செயல் வகைகளையும் குறித்துக்கொண்டு தம்மோரன்னோருக்கு வெளியிடுவது யாவர்பாலும் அமைந்திருந்தது.

அவர்கள் நம் நாட்டிற் புகுந்து தங்கியபோது வடமொழியிற் காணப்படும் வேதங்களையும் மிருதிகளையும் உபநிடதங்களையும் பிறவற்றையும் கற்றோரைத் துணையாகக் கொண்டு தமது மொழியிற் பெயர்த்துக்கொண்டனர். கிரையர்சன் முதலியோர் மக்கள் பேசும் மொழிக் கூறுகளைக் கண்டு குறித்தனர். தர்ச்டன் முதலியோர் மக்களினத்தின் பல்வேறு பிரிவுகளையும், அவர்களுடைய வாழ்க்கை முறை, குணம், செயல் ஆகியவற்றையும் தொகுத்துரைத்தனர். ஊல்சு முதலியோர் கல்வெட்டுக்களைக் கண்டனர். மெக்கன்சி முதலியோர் பழங்கால வரலாற்றுக் குறிப்புக்களைத் தொகுத்து வைத்தனர். செர்பாட்சிகி முதலிய ருசியர், பௌத்தம் முதலிய சமய தத்துவங்களை ஆராய்ந்து கண்டனர். இவை யாவும் ஆங்கில மொழியின் செல்வங்களாகத் திகழ்கின்றன. இவ்வாறே இந்த ஐரோப்பியர் எந்த எந்த நாடுகட்குச் சென்றார்களோ அந்த அந்த நாட்டின் இயற்கை நலங்களையும் மக்களினத்தின் பண்பாடு, மொழி முதலிய இயல்புகளையும் கண்டும் தேடியறிந்தும் எழுதி வைத்துள்ளனர்.

இம்மட்டோ? நிலவுலகைச் சூழ்ந்துள்ள கடல்களின் இயல்பையும் அவற்றுள் வாழும் உயிர்வகைகள், பறவைகள் முதலியவற்றையும் நிலத்திடை நிற்கும் மலை, காடு, ஏரி, குளங்களையும் ஆறுகளையும் ஆங்காங்கு வாழும் பறவை, விலங்கு முதலிய உயிரினங்களையும் கண்டு அவற்றின் இயல்புகளையும் வெளியிட்டுள்ளனர். இவ்வாறேதான் நிலம், நீர், நெருப்பு, காற்று முதலியவற்றின் கூறுகளைக் கண்டாற்போல வானத்தையுங் கண்டு காற்று நிலவும் பகுதி, அதன்மேலுள்ள மென்காற்பகுதி, அதற்கு மேலே ஒன்றுமில்லாத வெற்றிடப் பகுதிகளையும் வானத்திற் காணப்படும் நாள் கோள் முதலியவற்றையும் ஆராய்ந்துள்ளனர். இன்னோரன்ன செயல்வகைகளால் இன்றைய ஆங்கில மொழி, ஒருவன் நிலவுலகின் அகக்கூறு புறக்கூறுகளையும் அவற்றின் நுட்பங்களையும் இருந்த இடத்திலிருந்து நேரிற் சென்று கண்

டோன்போல இனிது அறிந்துகொள்ளுதற்கேற்ற அறிவுக் கலைக் கண்ணாடியாக உலகெலாம் பரவிய உயர்தனிச் செம்மொழியாக விளங்குகிறது.

இந்த ஆங்கில மொழி போலத்தான் நமது நாட்டிலும் வடமொழி தோற்றம் பெற்றது. ஐரோப்பியர் மொழிக்குப் பேச்சொலியோடு எழுதப்படும் எழுத்தும் இருந்தது. ஆனால் வடமொழியாளருடைய வடமொழிக்கு எழுதுதற்குரிய எழுத்து இலதாயிற்று. அவர்கள் தமிழகத்துக்கு வந்தபோது அவர்களது வடமொழி "எழுதாக்கிளவி" யாகவே இருந்தது. அவர்களும் இந்த நாட்டைப் பார்க்க வந்தவர் என்ற பொருள்படத் தம்மைப் "பார்ப்பனர்" என்றே கூறிக் கொண்டனர். அவர்கள் இன்றைக்கும் வடமொழியல்லாத ஏனைத் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலியவற்றைப் "பிரதேச பாசை" என்று கூறுவதே இதற்குச் சான்றாகும். தொடக்கத்தில் அவர்கள் ஆறு வகைத் தொழில்களே மேற்கொண்டிருந்தனர். அவை வேதம் ஓதல், ஓதுவித்தல், வேள்வி வேட்டல், வேட்பித்தல், ஓதல், ஓதுவித்தல் என்ற இரண்டிற்கும் வேண்டும் பொருளை உடையவரிடம் இரத்தல், ஓதுவித்தல், வேட்பித்தல் ஆகிய இரண்டிற்கும் உரிய பொருளை ஈதல் என்று கூறப்படுகின்றன.

"ஓதல் வேட்டல் அவை பிறர்ச் செய்தல்
ஈதல் ஏற்றல் என்று ஆறு புரிந்தொழுகும்
அறம்புரி அந்தணர்"

என்று பதிற்றுப்பத்தும், "அறுவகைப் பட்ட பார்ப்பன பக்கம்" எனத் தொல்காப்பியமும் கூறுவது காணலாம். எனவே, அவர்கட்கு உழவு வாணிகம் முதலிய தொழில்கள் இல்லை என்பது தானே பெறப்படும். படவே, அவர்கள் பண்டை நாளில் பொருள் மிகவும் உடையவரான அரசர் சார்பிலும் செல்வர் ஆதரவிலும் வாழ்ந்து வந்தனர். ஏனை உலகியல் தொழில்களைச் செய்து வாழும் மக்கள் தொடர்பு இல்லாமையால் நெடுங்காலம் வரையில் அவர்களது வடமொழி, அவர்கள் சூழலில் இருந்து வந்ததேயன்றி நாட்டு மக்கள் அறியும் எல்லைக்கு வரவில்லை. வேற்றவர்களான பல்லவர் ஆட்சி நிலை கண்ட போதுதான் அரசியற் செப்பேடுகளில் வேந்தர்களின் குடிவரவு கூறும் பகுதியில் வடமொழி இடம் பெறுவதாயிற்று. அவர்கட்குப்பின் வந்த பாண்டியர் காலத்தில் அம்மரபு சின்னாளிருந்தது. பின்பு தோன்றிய சோழ பாண்டியர் காலத்தில் அவ்வழக்காறு வீழ்ந்து போயிற்று இன்னும் பல்லவர் அவரையடுத்த பாண்டியர் சேப்பேடுகளில் குடிவரவு கூறும் பகுதி வட

மொழியிலும் ஏனையாவுந் தமிழிலும் இருப்பதைக் காணலாம். அவ்வடமொழிப் பகுதியும் தேவநாகரி என்ற எழுத்தில் உள்ளது. அவ்வெழுத்தும் மராட்டர் மொழிக்குரிய எழுத்துக்களாகும். பிற்காலத்தே புத்தரும் ஆருகதரும் தமிழகம் போந்த போது தான் தமிழ் எழுத்துக்களைச் சிறிது திரித்துக் கிரந்த எழுத்துக்கள் அமைத்துக் கொள்ளப்பட்டன. என்றாலும் மேலை நாட்டு ஐரோப்பிய மக்களைப் போலவே தாம் சென்ற பகுதிகளில் வாழ்ந்த மக்களிடையே வழங்கிய வரலாறுகளையும் பொருள் இடம் முதலியவற்றின் இயல்புகளையும் கண்டும் கேட்டும் தங்கள் மொழியில் பெயர்த்துக் கொள்ளும் இயல்பு வடமொழியாளரிடத்தும் நன்கு அமைந்திருந்தது. அரசர், வணிகர், உழவர், பாணர், கூத்தர் முதலியோரிடத்து இருந்த அறநூல், பொருள் நூல், இசை நூல், கூத்து நூல் முதலிய பலவேறு கலை நுட்பம் கூறும் நூல்களைப் பெற்றுத் தமது வடமொழியில் ஆக்கிக் கொண்டனர். அந்தணர்கட்கு அவை தொழில்கள் அல்லவாயினும் சிறந்த கலை நூற்களைத் தமது மொழியில் பெயர்த்துக் கொள்வது அவர்களுடைய நல்ல பண்பாகும். அவர்கள் எப்போதும் அரசர், குறுநிலத்தலைவர், வணிகர் முதலிய செல்வர் சார்பிலேயே இருந்து வந்ததால் இச்செயல்கள் அவர்கட்கு எளிதில் இயன்றன. இவ்வாறே செல்வர் அருள் வேண்டி நின்ற இயற்புலவர், ஓவியப் புலவர், கோயில்களின் அமைப்பும் முறையும் கூறும் ஆகமப் புலவர் முதலிய பலவகைப் புலவர்களின் கலைநூல்களும் மருத்துவ நூல்களும் பிறவும் வடமொழியில் மாறின.

அரசு நிலையில்லாமையால் நாட்டில் அடிக்கடி நிகழ்ந்த போர்களில் பார்ப்பனர் ஒழிய ஏனையாவரும் கலந்து கொள்ளும் கடமையுடையவர். அதனால் அவர்களுடைய கலைச் செல்வங்கள் பலவும் வடமொழியாளரிடம் இருப்பது நலம் என்றும் அந்நாளையோர் கருதினர். அவ்வாறு கருதியிருந்ததில் தவறில்லை.

மேலை நாட்டு ஐரோப்பியரிடம் காணப்படாத ஒரு தீய பழக்கம் வடமொழியாளரிடம் இருந்தது. ஐரோப்பியர் தாம் கேட்கும் செய்தியும் கற்கும் பொருளும் யாவரிடம் கிடைத்திருக்கின்றனவோ அவரையும் அவர்களின் நூலையும் விடாமற் குறிப்பது அவர்கள் வழக்கம். அவர்களுடைய நூல்களைக் காண்போமாயின் "இது இன்னார் கூறியது; இதைக் கூறியவர் இன்ன நூலிற் கூறியுள்ளார்." என்பதைத் தவறாமற் குறிப்பர். பின்பு எந்தப்பொருளேனும் புதிதாகக் காணப்படின் அப்பொருள் காணப்படும் இடத்தே அதற்கு எப்பெயர் வழங்குகிறதோ அதனைத் தங்கள் மொழியொலிக் கேற்பத் திரித்துக்கொள்வர்;

ஊர்ப் பெயர், மக்கட்பெயர் ஆகியவற்றையும் அவ்வாறே திரித்துக்கொள்வது அவர்கள் இயல்பு. வடமொழியாளரோ எனில் அப்பெயரை வடமொழியில் மொழிபெயர்த்து அவர்களுடையதாகத் தோன்றுமாறு செய்துகொள்வர். விரிஞ்சிபுரத்திலுள்ள இறைவனுக்குப் பழப்பெயர் வழித்துணை நாயனர் என்பது. விருத்தாசலத்துக்குப் பழமையான பெயர் முதுகுன்றம் என்பது. வழி என்பதை மார்க்கமென்றும் துணை என்பதைச் சகாயம் என்றும் மொழிபெயர்த்து மார்க்க சகாயர் என்றும்; முதுமை—விருத்தம்; குன்றம்—அசலம்—ஆகவே முதுகுன்றம்—விருத்தாசலம் என்றும்; வெண்காடன் என்பதைச் சுவேதாரணியன் என்றும் கூறினர். இவ்வாறே விரிஞ்சிபுரத்துக்கு அண்மையில் ஓடும் பாலாற்றை க்ஷீரநதி என்றும், அழகர் மலையிலுள்ள சிலம்பாற்றை நூபுரகங்கையென்றும், அறம் வளர்த்தாள், பெரியநாயகி என்ற பெயர்களைத் தர்மசம்வர்த்தனி, பிரகந்நாயகி என்றும் மொழிபெயர்த்துக்கொண்டனர். இவ்வாறே சைவத் திருமுறைகளிலும் நாலாயிரப் பிரபந்தங்களிலும் காணப்படும் பலபெயர்கள் வடமொழியில் பெயர்க்கப்பட்டுள்ளன. வழித்துணை நாயனரை ஐவே கைடு (Highway guide) என்றோ முதுகுன்றை குட் ஓல்டு இல்லக் (Good old hillock) என்றோ ஆங்கிலேயரோ வேறு ஐரோப்பியரோ மாற்றியதோ, மாற்றுவதோ கிடையாது.

இத் தீச்செயலையே பல நூற்றாண்டுகளாகச் செய்துவந்தமையின் பிற்காலத்தே வாழ்வில் அமைதி தோன்றியதும் மக்கள் தங்கள் நூல்களை எழுதத் தொடங்கியபோது வடமொழியிலிருந்து பெறவேண்டிய நிலைமை தோன்றிற்று. அப்போது தமிழ்நாட்டுத் தமிழர் ஊர்க்குரிய வரலாற்றை வேறு எவரோ எந்த நாட்டிலோ கூறியதாக வரலாறுகள் வேறுபடலாயின. இசையும் கூத்தும் சமயக்கருத்தும் பிறவும் பழம்பெயர் மறைந்து போக வடமொழிப் பெயரால் வெளிவரலாயின. பின்வந்தோர் உண்மை உணரமாட்டாமல் எல்லாம் வடமொழியிலே உள்ளன; தமிழ்மொழியே வடமொழியிலிருந்து தோன்றியதுதான் என்று கூறலுற்றனர். வேள்வி செய்தோர்க்கும் செய்வித்தோர்க்கும் பண்டைநாளில் வேந்தரும் செல்வரும் காமக்காணி என்று சிறப்புப் பெயர் நல்குவது வழக்கம். இடைக்கால கல்வெட்டுக்கள் மிகப்பல இதனைக் கூறுகின்றன. இவ்வாறு சிறப்புப் பெயர் பெற்ற சான்றோர் ஒருவர் சங்க இலக்கியத்தில் வருகிறார். அவர் பெயரை ஏட்டில் எழுதினோர் காமக்கணி என்று எழுதிவிட்டனர். அதைக் கண்ட இக்கால அறிஞர் அது காமாட்சி என்பதன் மொழிபெயர்ப்பு என்று எழுதியொழிந்தார். காஞ்சிபுரத்

திலுள்ள காமக்கோட்டத்துக் காமாட்சிக்கு அப்பெயர் மிகவும் பிற்காலத்தே உண்டானது என்பது வரலாறு கூறும் உண்மை. இவ்வண்ணமே கோயில்களில் இறைவன்முன் சொல்லப்படும் அருச்சனைகள் பல திருமுறைகளிலும் பிரபந்தங்களிலும் காணப் படும் சிறப்புப் பெயர்களின் மொழிபெயர்ப்பாகவே உள்ளன. இதனால் விளைந்த பயன் என்னையெனில் சென்ற நூற்றாண்டின் இறுதியிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கப் பகுதியிலும் இருந்து பள்ளி மாணவர் பாடநூல்களுக்கு உரை எழுதினோரும் பிறரும் பின்விளைவு கருதாமல் தமிழில் வழங்கும் மணி, நீர், முத்து, சேரி, மீன், பழம் முதலிய யாவும் வடமொழித் திரிபுகள் என்றே எழுதினார்கள். உலகில் அறவாழ்விற் சிறந்த சான்றோர் களைத் தமிழர் கடவுளர் என்பர். அப்பெயரைத் தெய்வமாகவும் "ரிசி" களாகவும் மொழி பெயர்த்து அவர்கள் வரலாற்றுள் பலவற்றைத் தெய்வச் செயல்களாக உரைக்கலாயினர். சாதி சமுதாய வேற்றுமைகள் நிலைபெறுதற்கேற்பப் புராணங்கள் பல வடமொழி வாயிலாகத் தோன்றின. தமிழ் மொழியிற் காணப்படும் அறவுரைகளும் பொருளுரைகளும் யாவும் வடநூல் களிலிருந்தே தோன்றின என்ற கருத்து நாட்டவர் தெரியவும் மேனாட்டவரும் பிறரும் தமிழர்க்கெனத் தனித்த அறிவோ, பண்பாடோ, சமய ஒழுக்கமோ இல்லையென உணரவும் உரைத்தனர்; நூல்வடிவில் எழுதியும் வந்தனர். ஆங்கில அறிவும் அதன் வாயிலாக வடநூற்கருத்துக்களும் வரலாற் றுண்மைகளும் தமிழ் மக்கட்குத் தெரியவந்தன. அதனால் தமிழர்கட்கு வடமொழிபால் வெறுப்பு உண்டாயிற்று. இவ் வெறுப்பு வளர்தற்கேற்ப மேனாட்டவரும் தமிழரல்லாத பிறரும் இருமொழியும் பயின்று பெற்ற அறிவால் வடமொழியில் உள்ள வரலாறு பலவும் புளுகுக் குப்பைகள் ("A farrago of legendary nonsense" — W. Logan's Malabar) என்று திட்ட வட்டமாகக் கூறுவாராயினர். இதற்கிடையே நல்ல காலமாக மொழிநூல் நெறி (PHILOLOGY) தோன்றிப் பொய்யான கருத்துக்களை மறுத்துவிட்டது. உண்மை ஒளி விட்டுத் திகழ்வதாயிற்று.

இப்போது இந்தியப் பேரரசு வடமொழிப் பல்கலைக் கழகங் களை நிறுவி வடமொழியை நாட்டிற் பரப்ப முயலுகின்றது. வட மொழியை யாவரும் எளிதிற் கற்பதற்கேற்ற வழிமுறைகளை ஆராய்தற்கென அறிஞர் குழு ஒன்றை அமைத்துள்ளனர். இப்போது பரவியுள்ள வடநூலறிவே வடநூற் கடலுட் புதைந்து மறைந்து கிடக்கும் தமிழ்ச் சொற்கள் கருத்துக்கள் பலவற்றை எடுத்துக்காட்டி வருகிறது. வடநூல் அறிவு நாட்டில் பலரும்

சென்ற இதழின் தொடர்ச்சி.

வேனிற்காதை இசைப்பகுதி விளக்கம்.

சங்கீதம். ப. சுந்தரேசன்,

இசைத்தமிழ் ஆராய்ச்சியாளர், குடந்தை.

செம்பகை யார்ப்பே கூட மதிர்வே

கரிய மலர்போன்ற நெடிய கண்களையுடைய மாதவி, தன் மனையில் தமியளாய், வானிலையுற உயர்ந்த மேனிலையில் ஒரு பக்கத்து நிலாமுற்றத்தே இருந்து யாழ்க்கருவியை வாங்கி அதனை இசைக்கும்பொருட்டு வலக்கைப் பதாகை கோட்டொடு சேர்த்தி இடக்கை நால்விரன் மாடகந்தழீஇ—அக்கருவியின் நரம்புகளை இசைச்சுருதி ஒத்து ஒலிக்கச் செய்யவேண்டி,

---

362 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறியப் பரவுமாயின் மேலே கூறிய தமிழ் வரலாறுகளும் உண்மைகள் பலவும் மக்கட்குத் தெரிந்துவிடும். அவ்வந் நாட்டு மொழிகள் தத்தம் தனியியல்பை யுணர்ந்து தழைத்து வளரத் தலைப்படும். வடமொழியின் துணையில்லையாயின் வளம்பெறு என உரைக்கப்படும் பொய்யடிமையிலிருந்து நீங்கி அவை உரிமையும் சிறப்பும் பெற்று உயர்வு பெறும். நீதி மன்றங்களில் நிலவும் சட்டங்களில் புகுத்தப்பட்டிருக்கும் வழக்குக் கொவ்வாத கருத்துக்கள் பலவற்றின் புன்மை நாட்டு மக்களுக்கு நன்கு விளங்கும். ஆதலால் நமது பேரரசு வடமொழி பரவுதற்குச் செய்யும் இந்த முயற்சி பெரிதும் தமிழர் பாராட்டற்குரியதாகும்.

வடமொழியை யாவரும் படிக்கச் செய்யும் வகையில் கல்வியாளர்கள் அதனை ஆங்கில மொழிக்குரிய இடத்திலோ நாட்டாட்சிக்குரிய இடத்திலோ வைப்பது, காலநிலைக்கும் மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் ஒத்ததாகாது. தமிழ் நாட்டுக்குரிய தமிழ், உலகியலுக்குரிய ஆங்கிலம் என்ற மொழிகளைப் போல, வடமொழி இன்றைய வாழ்க்கைக்குப் பயன்படும் தகுதியுடையதன்று. அதனால் அதனை மூன்றாவது மொழியாக நிறுத்திப் பலரும் எளிதிற் பயின்று மொழிநலம் பெறச் செய்வது தான் நாட்டின் எதிர்கால அறிவுநலத்தை எண்ணும் நல்லறிஞர் கடனாகும்.

செம்பகை—ஆர்ப்பு—அதிர்வு—கூடம் என்னும் இசைத்தல் நரம்புக் குற்றம் இல்லாதவாறு ஆய்ந்து யாழினை இசைக்கூட்டுகின்றாள்.

செம்பகை;

பண்டைய யாழ்க் கருவிகளில் ஒவ்வொரு இசைக்கும் ஒவ்வொரு நரம்பு கட்டப்பெற்றிருந்ததால், அவ்யாழினை இசைக்கத் தொடங்குங்கால், அந்நரம்புகளை எந்த பாலைக்குக் கட்டவேண்டும் என்று எண்ணப்படுகின்றதோ, அதற்கேற்றவாறு ஒவ்வொரு தடவையும் நரம்புகள் எல்லாவற்றையும் ஒழுங்குபட ஆராய்ந்து மாடகத்தினாலேனும், அன்றித் திவவினாலேனும், சீர் செய்து அமைத்துக்கொள்ளவேண்டும்.

அவ்வாறு சீர் செய்தமைக்குங்கால் முதலில் செம்பகையினை ஆய்ந்து அதாவது செம்பகையில்லாது ஒழுங்குபடுத்தப் பெற வேண்டும். செம்பகை, என்பது தாழ்ந்த இசை. அதாவது இன்பம் இன்றியிசைத்தல் எனப்படும். இதனை

"இன்னிசை வழிய தன்றி
இசைத்தல் செம்பகைய தாகும்" எனவும்
"செம்பகை யென்பது பண்ணோடுளரா
இன்டமிலோசை என்மனர் புலவர்" எனவும் அடியார்க்கு

நல்லாரால் எடுத்துக்காட்டப்பெறுகின்றது. அரும்பதவுரையாசிரியர். செம்பகை என்பதனை **நரம்பிற்கலப்பு** என்பார்,

ஆர்ப்பு

ஆர்ப்பு எனப்படுவதை, அருப்பதவுரையாசிரியர் "நரம்பின் முழக்கம்" என்பார். அடியார்க்கு நல்லாரோ, "ஆர்ப்பு மாத்திரையிறந்த சுருதி=ஓங்கவிசைத்தல்" எனக்கூறி "சொன்ன மாத்திரையினோங்க விசைத்திடும் சுருதியார்ப்பே" எனவும் எடுத்துக்காட்டுவார். "**ஆர்ப்பெனப் படுவதளவிறந் திசைக்கும்**" எனவும் காட்டுவர்.

அதிர்வு - கூடம்

அதிர்வு என்பது நரம்பைச் சிதறவுந்தல் எனவும், கூடம் இசை நிறவாதது எனவும், அடியார்க்கு நல்லாராலும், அதிர்வு கம்பித்தல் எனவும், கூடம்-பகைநரம்பெனவும் அரும்பதவுரையாசிரியராலும் விளக்கப்பெறுகின்றன.

மேலும் அடியார்க்கு நல்லாரால், கூடம் எனும் குற்றம் "தன் பகையாகிய ஆளும் நரம்பினிசையிற் குன்றித் தன்னோசை

மழுங்கலெனக் கொள்க" எனவும் நன்கு விளக்கப்பெறுகின்றது.

'இனி உரையாசிரியர்களிற் சிறந்த அடியார்க்கு நல்லார் கூறியது எல்லாவற்றையும் ஒருங்கு எழுதி அறிதல் நலமாகும். அன்றியும் பண்டைய இசைத்தமிழ் நுட்பம் பலவும் மீண்டும் மீண்டும் எழுதியறிதலினாலும் மீண்டும் மீண்டும் நன்கு பயின்று உளங்கொள்வதினாலுமே நன்கு விளங்கும் தகைமையதாய்த் திகழுகின்றனவாதலால் எல்லாமாய்ச் சேர்த்தெழுதி அறிவாம்.

"செம்பகையார்ப்பே யதிர்வே கூடம்"

"செம்பகை, ஆர்ப்பு, அதிர்வு, கூடம், என்று நான்கினும் செம்பகை—தாழ்ந்தவிசை=இன்பமின்றியிசைத்தல், ஆர்ப்பு—மாத்திரையிறந்தசுருதி=ஓங்கவிசைத்தல், அதிர்வு=நரம்பைச் சிதறவுந்தல். கூடம்—இசை நிறவாதது. தம் பகையாகிய ஆறுநரம்பி னிசையிற் குன்றித் தன்னோசை மழுங்கல் எனக்கொள்க—இதனை,

"இன்னிசை வழிய தன்றி யிசைத்தல் செம் பகையதாகுஞ்
சொன்னமாத் திரையி னோங்க விசைத்திடுஞ் சுருதி யார்ப்பே
மன்னிய விசைவ ராது மழுங்குதல் கூட மாகு
நன்னுதால் சிதற வுந்த லதிர்வென நாட்டி னாரே"

என்பதனாற்கொள்க. இது பஞ்சபாரதீயம்" என்று, அடியார்க்கு நல்லாரால் மேற்கோள்காட்டி, அம்மேற்கோள் கூறும் நூற் பெயரையும் காட்டியிருப்பது மிகவும் போற்றிப் போற்றி மகிழத் தக்கதாகும்.

மேலும் அவ்வடியார்க்கு நல்லாரே வேறொரு இசைத் தமிழ் நூல் மூலமாகவும் அக் கருத்தினை விளக்குவது, இன்றும் பாராட்டத் தக்கதாகும். அதாவது

" அன்றி.

க. செம்பகை யென்பது பண்ணோடுளரா
இன்பமி லோசை யென்மனார் புலவர்

உ. ஆர்ப்பெனப் படுவ தளவிறந் திசைக்கும்

ந. அதிர்வெனப் படுவ திழுமென லின்றிச்
சிதறி யுரைக்குந ருச்சரிப் பிசையே

ச. கூடமென்பது குறியுற விளம்பின்
வாய்வதின் வராது மழுங்கியிசைப் பதுவே

எனக் கூறினருமுளர்—எனவும்

இவை நான்கும் மறக்குற்றத்தாற் பிறக்கும்; என்னை

"நீரிலே நிற்ற லழுகுதல் வேத னிலமயக்குப்
பாரிலே நிற்ற விடிவீழ்த ஞெய்மரப் பாற்படல்கோ
ணேரிலே செம்பகை யார்ப்பொடு கூட மதிர்வுநிற்றல்
சேரிநேர் பண்க ணிறமயக்குப் படும் சிற்றிடையே

என்றார் எனவும் காட்டியுள்ளார்.

அகவே, செம்பகை, ஆர்ப்பு, கூடம், அதிர்வு எனும் குற்றங்கள், மரக்குற்றத்தாற் பிறப்பனவாம் என நன்கு தெள்ளிதின் உணரத்தக்கது என்பதனையும் அறியலாம்.

இவ்விடத்து நினைவுகூர்தற்கும் சிறிது இடங்கொடுத்தல் நலமாகும்.

மறக்குற்றத்தாற் பிறக்கும் நால்வகைக் குற்றத்தினை, இளங்கோவடிகள் மூலத்திலேயே கூறியிருப்பது கொண்டு நுணுகிச் சிந்திக்குமிடத்து மாதவி கையில் இருந்த யாழ், மரக் குற்றமுடையதோ! என எண்ணலாமா?
அவ்வாறன்று:

எந்தக் கருவிகளும் செய்யப்பெறுங்காலத்து - மரக்குற்றம் உணரப்படுவதில்லை. கருவி செய்தபின் இயற்கையில் அழகு நிரம்பியே கண்ணுக்குத் தென்படும். முதன் முதலில் அக் கருவியை இசைக்குங் காலத்தும் உடனே மரக்குற்றத்தாற் பிறக்கும் நால்வகைக் குற்றம் புலப்படா.

நாளடைவில் இசைக்க, இசைக்க கருவியின் நரம்புகளினால் ஏற்படும் செம்பகையும், ஆர்ப்பும், அதிர்வும் கூடமும் உணரப் பட்டு, அதன்பின்னரே அக் கருவி மரய் குற்றமுடையது என உணரக்கூடும். ஆதலால் எந்த நேரத்தும் எப்பொழுதிலும் யாழ்க்கருவி இசைக்க, எடுக்குங் காலத்து முதன்முதலில் இக்குற்றங்கள் புதிதாகத் தோன்றியுள்ளதோவென நன்கு ஆராய்தல் மரபாகும்.

ஏனெனில் சிலகாலம்வரை நன்கு செவ்வையாக இருந்த கருவிகளிலும் சிலகாலத்தே புதியதாகக் குற்றங்கள் தோன்றி விடக்கூடும். இவ்வுண்மை, இசையறிபுலவர்களிலும் நுண்மாணுழைபுலம் உடையார்க்கன்றி ஏனையோர்க்கு விளங்கா நீர்மையதாகும்.

ஆகவே கருவியை (பழகிய கருவியை) இசைக்கக் கருதிய பாணனோ, அன்றிப் பாடினியோ முதன்முதல் கருவியைக் கைக் கொண்டதும் மிக இன்றியமையாத இந்நால்வகைக் குற்றங் களையே ஆய்தல் வழக்கானமைபற்றி இளங்கோவேந்தரும் "வலக்கைப் பதாகை கோட்டொடு சேர்த்தி யிடக்கை நான்விரல்

மாடகந்தழீஇ" எனக்கூறி அச் சொற்களைத் தொடர்ந்தே
"செம்பகை யார்ப்பே யதிர்வே கூடம்
வெம்பகை நீக்கும் விரகுளி யறிந்து" என மிக நுண்ணிய தொரு இன்றியமையாக் கருத்தினைக் கூறிப்போந்தார்.

வெம்பகை

மேற்கூறிய நால்வகைக் குற்றங்களை (மரக்குற்றத்தால் வரும் நரம்பினது. செம்பகை, ஆர்ப்பு, அதிர்வு, கூடம்) அப் பெருமானால் வெம்பகையென விதந்தோதப்பெற்றன.

இப்பகைகள், தோன்றுவது குறித்த இன்னும் சில கருத்துக்களும் சிலவாம். கருவிகள், சில பருவகாலங்களிற்கேற்ற வாறு அதாவது கார், கூதிர், வேனில், (இளவேனில்-முதுவேனில்) என்னும் பல பருவங்களில் இயற்கையாகவே சில மாறுபாட்டினை அடையக்கூடும். அவை இக்காலத்தும் உண்டு.

இக்காதையும் **வேனிற்காதை** யாதலால் இவ்வேனிற் காலத்திற்கேற்ப கருவிகளில் இயல்பான இயற்கைக் குற்றங்கள் சில தோன்றவும் கூடும். அவற்றுள் இங்கு கூறிய செம்பகை, ஆர்ப்பு, அதிர்வு, கூடமெனும் நான்கும் இன்றியமையாது தோன்றக் கூடுவனவாகவும் இருக்கலாம்.

வெம்பகை நீக்கும் விரகுளியறிந்து

இப்பகுதியினை, அடியார்க்குநல்லார், "இச்சொல்லப்பட்ட பகை நரம்பு நான்கும் புகாமல் நீக்கும் விரகைக் கடைப்பிடித்தென்க" எனக் கூறுவார்.

அதாவது, சிற்சில பருவகாலத் தாக்குதலால் கருவிகளில் ஏற்படும் இயற்கைக் குற்றம் காணும்பொழுது அக் கருவியை இசைக்காது (பயன்படுத்தாது) அறவே விட்டுவிடுவதில்லை என்பதாம். அன்றியும் ஏற்படுகின்ற வெம்பகையாம், செம்பகை. ஆர்ப்பு, அதிர்வு, கூடம் எனும் நான்கினை, நரம்புகளை **வலித்தல், மெலித்தல், பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், துள்ளல், தெருட்டல், வார்தல், வடித்தல், உந்தல், குறும்போக்கு,** என்றின்னன தொழின் முறையால், கூடியவரை நீக்குகின்ற முறையில் **விரகினைக் கடைப்பிடித்து**, அதாவது தந்திரத்தை, உபாயத்தைக் கடைப்பிடித்து என்பதாம்.

இந்நுட்பத்தினை நன்கறிந்த பெருந்தகையாம் இளங்கோ வடிகள், "வெம்பகை நீக்கும் விரகுளி யறிந்து" எனக்கூறிய தினுள்ள நுட்பம் மிக்குச் செறிவுற்ற நயம் பல, இற்றை நாளில் தமிழ் மக்களாகிய நம்மனோரே அறியாது விடுத்தோமாகில் யாரே அறிவர் !!!

தொடரும்

சகரக்கிளவி

[வே. வேங்கடராஜுலு ரெட்டியார்.]

இலக்கணவாசிரியர் ஓரிடத்தில் அமர்ந்துகொண்டு இவ்விச் சொற்களை இவ்விவ்வாறு வழங்கவேண்டும் என்று கட்டளை இடுபவரல்லர். அவர்கள் தங்காலத்தில் உள்ள இலக்கண நூல்களை ஆராய்ந்தும், சிறந்த இலக்கியங்களைப் படித்துச் சொல்லாட்சியைத் தெரிந்தும், உயர்ந்தோர் வழக்குக்களை அறிந்தும் நூலை இயற்றும் இயல்பினர். ஆசிரியர் தொல்காப்பியனார், 'தமிழ் கூறும் நல்லுலகத்து வழக்குஞ் செய்யுளும் நாடி, முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணித் தொகுத்தவர்' என்பது பாயிரத்தான் அறியப்படும். நூலினுள்ளும், வழக்கில் இவ்வாறு வரும், செய்யுளில் இவ்வாறு வரும் என்று, அவர் கிளந்து கூறியிருத்தலைக் காணலாம்,

தொல்காப்பியனார் மொழியின் முதலிலும் இறுதியிலும் நிற்கும் எழுத்துக்களைத் தெரிவித்திருக்குந் திறனை நோக்குவோம் :

எகரம் எந்த மெய்யெழுத்தோடுங் கூடி ஈற்றில் நிற்காது.

ஒகரம் நகரம் ஒன்றனோடுமட்டும் ஈற்றில் நிற்கும்.

ஔகாரம் ககர வகரங்களோடு கூடி ஈற்றில் நிற்கும்.

பு— ஒரு சொல்லில் மட்டுமே ஈற்றில் நிற்கும்.
(ஆயின் இரண்டு வகையாய்ப் பொருள் தரும்.)

சு— இரண்டு சொல்லில்மட்டுமே ஈற்றில் நிற்கும்.

ஞ்— ஒரு சொல்லில்மட்டும் நிற்கும்.

ந்— இரண்டு சொற்களில் நிற்கும்.

வ்— நான்கு சொற்களில் நிற்கும்.

மொழி முதலில்,

ஞகரவரியில் — ஞா, ஞெ, ஞொ இம்மூன்றே வரும்.

யகரவரியில் — யா ஒன்றே வரும்.

என்று கூறிய ஆசிரியர்,

சகர வரியில் — ச, சை, சௌ இம்மூன்று ஒழிய மற்றையெழுத்துக்கள் மொழி முதலில் வரும் என்று கூறியுள்ளார்.

சட்டி, சள்ளை, சமை, சமழ்த்தல் என்பனபோல வழங்குஞ் சகர முதன்மொழிகள் பிற்காலத்தில் வழங்கியவை யாகலின்,

'கடிசொல் இல்லை, காலத்துப் படினே' என்னுஞ் சூத்திரத்தால் அமைத்துள்ளனர் உரைகாரர்கள்.

ஆயின், நன்னூலார், தங்காலத்து வழக்கினைக் கண்டு ச, சை, சௌ மொழி முதலில் வரும் என்று கூறியுள்ளார், அதனை ஆதரித்துக் கூறும் உரைகாரர் மயிலைநாதர், சகர முதன் மொழிகள்

---

1. இக்கருத்துள்ள செய்யுளொன்றனை எழுதியிருக்கின்றார்.

சிலவற்றைக் காட்டி, அவற்ருல் சகரம் மொழிமுதல் வைக்கப்பட்டது என்ருர்.

இக் கூறியவற்ருல், சகரமுதன்மொழிகள் நன்னூலார் காலத்திற்குமுன் வழங்கலாயின என்பது பெறப்படுமேயன்றி தொல்காப்பியனர் காலத்திற்கு முன்னரே வழங்கிவந்தன என்பது பெறப்படாது.

தொல்காப்பியனர் காலத்தில் சமையல், சமைத்தல் என்னுஞ் சொற்கள் வழங்கின என்றதற்கு ஆதாரம் யாது? பண்டைச் செய்யுட்களிலும் உரைகளிலும் அடுகை, அடுதல், அட்டது என்னுஞ் சொற்கள் வந்துள்ளனவேயல்லாமல் சமையல், சமைத்தல் என்னுஞ் சொற்கள் வந்துள்ளன தெரியவில்லை. சமையலறையை அட்டில் என்று வழங்கியிருத்தலும் அறிதற்பாலது. இச்சொல் கன்னடத்தில் அடுகெமனே என்று வழங்குகின்றது.

சகரமுதன் மொழிகள் மிகப் பல தமிழில் வழங்கியிருக்குமாயின் ஆசிரியர் தொல்காப்பியனர் சகரம் மொழிமுதற்கண் வருதல் இல்லை என்பாரல்லர். சகரத்துக்கும் அவருக்கும் பகையா? இலக்கணவாசிரியர் ஓர் எழுத்தினிடம் பகையோவெறுப்போ கொள்ளுதல் உண்டோ! இனி,

'அ ஐ ஔ எனும் மூன்றலங்கடையே' என்னும் அடிக்கு,

'அவை ஔ என்னும்' ஒன்றலங்கடையே' என்னும் பாடவேறு உள்ளது என்பார், இப்பாடம் இன்ன நூல்நிலையில், அல்லது இன்னவரிடத்தில், இருக்கும் ஏட்டில் உளது என்று குறித்தல் வேண்டும் விவாதம் உள்ள இடத்தில் ஆதாரத்தோடு காட்டுதல் அமைவுடையதாகும். அ ஐ என்பதை ஏடெழுதினேர் சந்தி சேர்த்து அவை என்று எழுதியிருக்கலாம். இனி, இப்பாடமே பழமையது என்று கொண்டு நோக்குவோம். சூத்திரத்தின் முதலடி,

'சகரக் கிளவியும் அவற்ரோ ரற்றே' என்பது. இவ்வடியிலுள்ள சுட்டு, மேலைச் சூத்திரத்தில் உள்ள க த ந ப ம - க்களைக் குறித்தது.

'அவை ஔ என்னும் ஒன்றலங் கடையே' என்னும் அடியில் உள்ள அவை என்னுஞ் சுட்டு எதனைச் சுட்டுகின்றது? சுட்டப்படுவது பன்மையாயிருத்தல் வேண்டுமே. சகரவரியில் ஔகாரம் ஒன்றுமட்டுமே வாராதாயின்,

'ஒவ்வும் அற்றே நவ்வலங் கடையே' என்றதுபோல,

'சகரமும் அற்றே ஔ அலங்கடையே' என்று ஓர் அடியில் அமைத்திருப்பாரே! இவையெல்லாம் உளங்கொளற்பாலன.

வாள் என்னுந் தொழிற் பெயர்.

சொல்லுதலா ? கொல்லுதலா ?

(திரு. அடிகளாசிரியர், *புலவர் கல்லூரி, கரந்தை.*)

தொல் காப்பிய எழுத்ததிகாரப் புள்ளி மயங்கியலுள் ளகர வீற்றுத் தொழிற் பெயர் முடிபு உணர்த்தும்

தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெயரியல

(தொல். எழு. புள். 106)

என்னும் நூற்பாவுரையில் **"எல்லாம், என்றதனுல் தொழிற் பெயர்கள் இருவழியும் இவ்வாறன்றிப் பிறவாறு முடிவனவுங் கொள்க.** உதாரணம்: கோள் கடிது, கோட்கடிது; வாள் கடிது, வாட் கடிது; சிறிது தீது, பெரிது எனவும்; கோள் கடுமை, கோட் கடுமை; வாள் கடுமை, வாட்கடுமை; சிறுமை, தீமை, பெருமை எனவும் வரும். **ஈண்டு வாள் என்றது கொல்லுதலே"** என்று இப்பொழுதுள்ள **இளம்பூரண அச்சுப் புத்தகங்கள்** எல்லா வற்றிலும் காணப்படுகின்றன.

"எல்லாம், என்றதனுனே இருவழியுந் தொழிற் பெயர்கள் உகரமும் வல்லெழுத்தும் பெருது திரிந்தும் திரியாதும் முடிவனவுங் கொள்க. உதாரணம்: கோள் கடிது, கோட் கடிது; கோள் கடுமை, கோட் கடுமை என்பன போல்வன பிறவும் வரும். இனி வாள் கடிது, வாட் கடிது; சிறிது, தீது, பெரிது எனவும்; வாள் கடுமை, வாட் கடுமை எனவுங் காட்டுக. **வாள்—கொல்லுதல்"** என்று இப்பொழுதுள்ள **நச்சினுர்க்கினிய அச்சுப் புத்தகங்கள்** எல்லாவற்றிலும் காணப்படுகின்றன.

யான் இளம்பூரண ஓலைச்சுவடிகளையும் அச்சுப் புத்தகங்களையும் ஒப்புநோக்கிப் படித்துவந்தபொழுது, என்னிடமிருந்த சுவடிகளில் '**வாள்—சொல்லுதல்**' என்றே எழுதப்பட்டிருந்தது. உடனே, நச்சினுர்க்கினிய ஓலைச்சுவடியை எடுத்துப் பார்த்தேன். அதில் முன்னர் கோள் என்பதை மட்டும் உதாரணமாகக் காட்டிப் பின்னர், " இனி வாள் கடிது வாட் கடிது சிறிது தீது பெரிது எனவும் வாள் கடுமை வாட் கடுமை எனவுங்காட்டுக. **அது சொல்லுதலாக்கி"** என்று காணப்பட்டது.

ஏட்டுச்சுவடிகளுக்கும் அச்சுப் புத்தகங்கட்கும் இவ்வாறு வேற்றுமையிருந்தபடியால் வாள் என்னுந் தொழிற் பெயர்க்குக் கொல்லுதல் பொருளா சொல்லுதல் பொருளா என்று ஆராயத் தொடங்கினேன்.

திவாகர நிகண்டில் ஒலி பற்றிய தொகுதியில் "**வாளாவென் கிளவி பேசாவென் ருகும்**" என்றொரு நூற்பாவிருக்கக்கண்டேன். இந்நூற்பாவின்படி வாளாமை என்பது பேசாமை என்னும் எதிர் மறையை உணர்த்தும் என்பது புலனாயிற்று. அங்ஙனமாயின் வாள் என்னுந் தொழிற் பெயர் பேசுதல் அல்லது சொல்லுதல் என்னும் உடன்பாட்டுப் பொருளை உணர்த்தவேண்டியது முறைமையேயாகும் என்று கருதி, இலக்கியங்களில் அது சொல்லுதல் என்ற பொருளில் வந்துள்ளதா என்று ஆராயத் தொடங்கினேன்.

சிலப்பதிகாரம் கால்கோட் காதையுள்,

> '**வாய்வா ளாண்மையின் வண்டமி ழிகழ்ந்த**
> **காய்வேற் றடக்கைக் கனகனும் விசயனும்**"
> (அடி—221, 222)

என்னும் பகுதியுள், **வாய்வாள் ஆண்மை என்பது வாய்ச்சொல் ஆண்மை** என்ற பொருளில் வந்திருத்தலை அறிந்தேன். ஆனால், அதன் **அரும்பத**வுரையாசிரியர் **வாய்வாள் ஆண்மை — வாய் வறிது இராமை** என்று பொருள் எழுதியிருந்தபடியால் இவ்வெதிர் மறைப்பொருள் பொருத்தம்தானா என்று ஐயம் உண்டாயிற்று. **உயர்திரு, வேங்கடசாமி நாட்டாரவர்கள்** சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியுள்ளபடியால் அவர்கள் இப்பகுதிக்கு எவ்வாறு உரை கொண்டார்கள் என்று பார்த்தேன்.

"**வாய்வாள் ஆண்மை—வாயாகிய வாளின் ஆண்மை; வாய்வீரம்.** வாய் வாளாண்மை என்பது ஒன்றும் பேசாதிருத்த லாகலின் இச்சொல் அதனின் வேறுமென்க. 'வாய்வா ளாண்மை ஆகா யப்பூப் பழைதோ புதிதோவென்று புகல்வான், உரைக்கு மாற்றம் உரையா திருத்தல், (மணி—30—247—9)" என்று எழுதி யிருத்தலினால் **அவர்கள் 'வாள்' என்பதற்கு 'வீரம்' என்று** பொருள் கருதியுள்ளனர் என்று அறிந்துகொண்டேன்.

தக்க யாகப் பரணியில் '**வலைய வாளரா மீது**' (தாழிசை 111) என்று தொடங்கும் பாட்டில் '**வாளரா**' என்பதற்கு அதன் உரையாசிரியர் '**வார்த்தைக் கீர்த்தியை யுடைய பாம்பின் மேலே**' என்று உரையெழுதியிருப்பதையும், நானூற்றொன்றாம் தாழிசை உரையில் அவர், **வாள் என்பது கூர்மையும், சோதியும், வார்த்தையும் பிறவுமான பல பொருளொரு சொல்** என்று எழுதியிருப்பதையும் நோக்கும்பொழுது வாள் என்பதற்குச் சொல் லுதல் என்ற பொருளுண்மை தெளிவாய் விளங்கிற்று.

இப்பொழுதுள்ள தொல் காப்பிய எழுத்ததிகார அச்சுப் பிரதி களிலெல்லாம் 'வாள்—கொல்லுதல், என்றே எழுதப்பட்டிருத்தலின் அதற்குக் 'கொல்லுதல், என்றும் பொருள் உண்டா என்று

லெக்சிகனைப் பார்த்தபொழுது, அதனுள் 'வாள் என்பதற்குக் 'கொல்லுதல்' என்று பொருள் எழுதப்பட்டு, அது வந்துள்ள இடம் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்துள்ள இந்நூற்பா வுரை யென்றே குறிக்கப்பட்டிருந்தது.

ஏடெழுதிய சிலர் சொல்லுதலைக் கொல்லுதலாக்கிய காரணத் தினாலோ, அல்லது பிரதி செய்தவர்கள் சொல்லுதலா கொல்லுதலா என்று துணியாமையினாலோ இப்பிழை ஏற்பட்டிருக்கலாம்; அப்பிழை கருவி நூலாகிய அகராதியிலும் ஏறி வழங்கத் தொடங்கியதை நோக்கும்பொழுது, **ஒன்றைப் பிறிதொன்றுபோலுமெனப் பிழை படக் கருதலானும் மொழி வேறுபடும்** என்று கூறிய **சூரிய நாராயண சாஸ்த்திரியார்** கூற்று உண்மையே என்பது விளங்கு கின்றது.

சூடாமணி நிகண்டாசிரியர் **"எடுத்தவா ளாவெனுஞ் சொல் இதுகேளா வாகுமென்ப"** என்று கூறுகின்றபடியால் அவர் 'வாளா; என்பதற்குக் 'கேளா' என்று பொருள் கருதி யுள்ளார் என்று தெரிகின்றது. எனேவ அவர் கருத்தின்படி வாள் என்னும் தொழிற் பெயர் கேள் என்னும் பொருளில் வரவேண்டும். இவ்வழக்கு உண்டாவென்று தெரியவில்லை.

தொல்காப்பிய ஏட்டுச் சுவடிகளை வைத்துக்கொண்டு ஒப்பு நோக்கிப் படித்தபொழுது **இங்ஙனம் திருத்துதற்குரிய வாயும் நல்ல பாடங்களாயும் காணப்பட்டவை பலவாகும்.** இவற்றைத் தமிழறிஞரும் தமிழ்த் தொண்டர்களும் உணர்ந்து தமிழ் மக்களுக் குக் கருவூலமாகிய தொல்காப்பிய வுரைகள் தூய பதிப்பாய் வெளிவர உதவ வேண்டுகின்றேன்.

நற்றிணையில் தாவரங்கள்.

வித்துவான், சொ. சிங்காரவேலனார்,
தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர்.

புன்னை :

கடற்கரை சார்ந்த பகுதிகளில் தழைத்து விரியும் மரம் புன்னை. மணற்பாங்கான இடத்தில் ஓங்கி வளரும் உயர்மரம். இதைப்பற்றிய இயல்புகளையும் நற்றிணைப் புலவர்கள் விதந்து பலவேறிடங்களிலும் பாடியுள்ளனர். 'கருங்கோட்டுப் புன்னை' (67) என்றார் பேரிசாத்தனார். 'நீல்நிறப் புன்னைக் கொழுநிழல்' (4) என்று இதன் தழைந்து விரிந்த தன்மையை அழகாகப்பாடினார் அம்மூவனார். புன்னை மரம் பருத்த அடியை உடையது. இதனைப் பராரை என்பர் பாவலர். பொகுட்டரை, பொரியரை, மழவரை என்றெல்லாம் அடிமரத்தின் இயல்புகள் ஆங்காங்குக் குறிக்கப்பெறும். புன்னையோ பராரை உடையது. நம்பிகுட்டுவன் என்ற நற்றமிழ்ப் புலவர் 'பராரைப் புன்னைச்சேரிமெல்ல' (145) என்று இதனைக் குறித்துள்ளார்.

பெண்கள் கூடிக் கடற்கரையிலே விளையாடினர். சிறு வீடு கட்டி விளையாடினர். கடல் அலையொன்று பாய்ந்து வந்து பெண்கள் கட்டிய சிற்றிலைச் சிதைத்துச் சென்றது. சிறுமிகளுக்கு வந்து விட்டது சீற்றம். 'அப்படியா? எம் அன்னையரிடம் கூறி என்ன பாடு படுத்துகிறோம் பார் இனி' என்று கூறி ஓடினர். அப்போது வேகத்தில், அவர்களணிந்திருந்த முத்துச் சரத்திலிருந்த முத்துக்கள் சில சிதறிக் கீழே வீழ்ந்தன. அவை புன்னையரும்புகளை ஒத்துக் கீழே கிடந்து ஒளிர்ந்தன. வழிப்போவார் 'புன்னை அரும்புகளோ முத்துக்களோ' என்று அவற்றைக் கண்டு பேதுற்றனர். என்ற பழந்தமிழ்ப் பாடலொன்றில் புன்னை அரும்பு முத்தைப் போன்று வெண்மையும், தூய்மையும், விழுப்பமும் வாய்ந்திருக்கும் என்ற செய்தி பேசப்பெறுகின்றது.* இவ்வாறே இளநாகனார் என்ற நற்றிணைப் புலவர் புன்னையைப்பற்றிப் பாடுகின்றார். அவர் 'ஊர்க்குருவியின் முட்டையை உடைத்தாற்போன்ற' பெரிய அரும்பு மலர்ந்த கரிய அடியை உடைய புன்னைச் சோலை' என்று பாடினார். முட்டை உடைத்தமைக்கும் போது அவிழ்ந்தமைக்குமாக அவர் கூறிய தலையான உவமைநலம் எண்ணுந்தொறும் இனிமை பயக்கின்றது.[1]

---

* "முன்னைத்தம் சிற்றில் முழங்குகடலோத மூழ்கிப்போக
அன்னைக் குரைப்பன் அறிவாய் கடலேயென்றலறிப்பேரும்
தன்மை மடவார் தளர்ந்துகுத்த வெண்முத்தம் தயங்குகானற்
புன்னையரும் பேய்ப்பப் போவாரைப் பேதுறுத்தும் புகாரே எம்மூர்"

1. "உள்ளூர்க் குரீஇக் கருவுடைத்தன்ன
பெரும்போது அவிழ்ந்த கருந்தாட் புன்னை" (231)

உலோச்சனார் என்ற உயரிய தமிழ்ப் புலவர் புன்னையின் எழில் நலத்தை விளக்க வந்தவர் உலோகங்களோடு இணைத்து உரைத்துள்ள திறம் உள்ளுந்தொறும் உவகை பயப்பதாகும். புன்னையின் கிளைகள் கரியன; அவை இரும்பைப்போன்றன. புன்னையின் இலைகள் நீல நிறம் உடையன; அவை நீல மணிபோன்றன. பூங்கொத்துக்கள் வெள்ளியன; அவை வெள்ளிபோன்றன. பூக்களிடையே மகரந்தப்பொடி பொலிவுறும். மஞ்சள் நிறத்தது; அது பொன்போன்றது என்று முடித்தார் உலோச்சனார்.[2] என்னே உள்ளது புனையும் தெள்ளுதமிழ்ப் புலவர் ஆற்றல்! புன்னை மலர்களை மாலைக்காகப் பறிக்கும் வழக்கம் இருந்ததென்றும், அப்படிச் சூடுவோர் பறித்தனபோக எஞ்சிய மலர்கள் நெய்கனி பசுங்காய்களாகக் கிளைதொறும் இருந்தனவென்றும் இப்புலவரே மற்றோர் பாடலில் மொழிகின்றார். எனவே புன்னைக் காயிலிருந்து நெய் எடுக்கும் வழக்கம் அன்றும் இருந்தது என்ற குறிப்பையும் உணரலாகும்.[3] இன்றும் சில மாவட்டங்களில் புன்னை நெய் விளக்கெரிக்கப்படுகின்றது. புன்னையின் அடிமரத்தைப்பற்றி அம்மூவனார் பாடுங்கால் முழவு போன்ற அடிமரம் என்று பாடுகின்றார். 'புன்னையங் கொழுநிழல், முழவு முதல்' (315) என்பது அம்மூவனாரின் திருமொழியாகும். இவற்றால் புன்னை மரத்தைப்பற்றிய பல்வேறு செய்திகளையும் அறியலாகும்.

ஈந்து :

இம்மரத்தினை 'ஈச்சை' என்று இப்போது பெரிதும் வழங்குகின்றோம். இதுவும் பாலை நிலத்தேயே மிக வளர்வது. 'ஒலிவல் ஈந்தின் உலவையங் காட்டுள்' என்று பாடினார் பெரும்பதுமனார். இது நன்கு தழைந்து நிற்குமென்றும், வலியதென்றும் உணரலாம். இது முளைக்கின்ற இடம் களர் நிலமே என்றார் மற்றொரு புலவர். அன்றியும் இம்மரத்தின் பசுங்காய் செங்காயாய் முதிர்ந்து பின் கருங்கனியாய் உதிர்ந்துவிடும் என்றார் அவர்;[1] இம்மரத்தில் முற்றிய காயின் குலை தாளிப்பனை மரத்தின் காய்க்குலைபோன்றிருக்கும் என்று விளக்கியுள்ளார் மற்றோர் விழுமிய புலவர்.[2] இம்மரத்தின் இயல்புகளாக நற்றிணையிலிருந்து நாம் அறியத் தகுவன இவையே. ஈச்ச மரத்தின் இலைகள் குப்பைபோன்று மேடிட்டுக்கிடக்கும் என்று பாடுகிறது புறநானூறு. (116)

---

2. "இரும்பினன்ன கருங்கோட்டுப் புன்னை
நீலத்துஅன்ன பாசிலை அகந்தொறும்
வெள்ளிஅன்ன விளங்கிணர் நாப்பண்
பொன்னினன்ன நறுந்தாதுதிர" (249)

3. "சூடுநர் தொடுத்த மிச்சில் கோடுதொறும்
நெய்கனி பசுங்காய் தூங்கும் துறைவனை" (278)

1. "பைங்காய் நல்லிடம் ஒரீஇய செங்காய்க்
கருங்களி ஈந்தின் வெண்புறக்களரி" (126)

2. "கற்றைஈந்தின் முற்றுக் குலையன்ன
ஆளில் அத்தத் தாளம்போந்தை" (174)

வேம்பு :

வேப்ப மரம் இயல்பாக எங்கும் வளரக்கூடிய மரம். இதன் காய்கள் கசக்கும் தன்மையின.

" மெல்லொற்றுவலியா மரப்பெயரும் உளவே
(எழுத்து. முற்றி. 11)

என்ற தொல்காப்பியர் வாக்கில் வலியா மரப்பெயரும் உளவே என்றதனுன். வலிக்கும் மரப்பெயரும் உள என்பது பொருளாக்கி வேம்பு + மரம் வேப்பமரம் என்று வல்லார் முடிப்பர். இவ்வேம்பு பாண்டியர் குடியின் அடையாள மாலையாக இருந்தது. ஆசிரியர் தொல்காப்பியரும்,

'போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்' (பொருள். புறத் 5)

என்று இதனைக் குறித்தனர். 'நகுதார் வேம்பன்' 'சினையலர் வேம்பன்' என்றெல்லாம் இதனெடு சார்த்திப் பாண்டிய வேந்தனும் குறிக்கப்படலாயினன். இவ்வேம்பின் இயல்பினை நற்றிணை கூறுகின்றது.

பொரியரை என்ற பகுப்பினைச் சார்ந்தது இதன் அடிமரம்; இலைகள் செறிந்தும் செறியாமையும் தோன்றுதலால் 'புள்ளி நிழலை' உடையதாக இருக்கும். வானையளாவும் நீண்ட கிளைகளை உடையது. அக்கிளைகளில் பருந்து முதலாயின கூடுகட்டி வாழும் என்ருர் இளங்கீரனுர்! புல்லிய காம்புகளோடு இருக்கும் இதன் சிறிய இலைகள் என்ருர் மருதனிளநாகனுர்.[1] சில வேப்ப மரங்கள் பருத்த அடியை உடையனவாயிருத்தலும் இயல்பே. 'பராரை வேம்பு' (218) என்று அவற்றின் இயல்பு குறித்தார் காவிதிகீரங்கண்ணனுர். வௌவால் வேம்பினது பழம் கசக்குமெனக் கருதி அதனைத் தின்னுமல் அகன்று செல்லும்.[2] தேன்போன்ற பால் வற்றிப் போயின இருப்பையினது இனிய பழங்களை அருந்தும் என்று பாடி வேப்பங்கனிகளின் சுவை குறித்தார் கயமனுர்.[3]

நெல்லி :

அக்காலத்தில் நீரற்ற காட்டுவழிகளில் நெல்லி மரங்களை வைத்துப் பயிர் செய்திருப்பார்கள். தண்ணீர் வேட்கையால்

---

1. "ஈன்பருத்துயவும் வான்பொரு நெடுஞ்சினை
பொரியரை வேம்பின் புள்ளிநீழல்" (2)

2. வேம்பின் ஒண்பழம் முணைஇ இருப்பைத்
தேம்பால் செற்ற தீம்பழம் நசைஇ
வைகுபனி உழந்த வாவல்" (279)

3. "குறும்பொறை மருங்கின் கோட்சுரம்நீந்தி
நெடுஞ்சேண் வந்த வந்த நீர்நசை வம்பலர்
செல்லுயிர் நிறுத்த சுவைக்காய் நெல்லிப்
பல்காய் அஞ்சினை'' (அகம்—271)

தவித்துவரும் மக்கள், கானகத்திற்குப் புதியவர்கள் நெல்லிக் கனியைத் தின்று தங்கள் நீர் வேட்கையைப்போக்கிக் கொள்வார்கள். நீரின்மையினால் சென்ற உயிரை நெல்லிக்காய் கொண்டுவந்து நிறுத்திவிடும் எனவே நெல்லியின் சுவைமிக்க காய்களை அறம் தலைப்பட்ட காய்கள் என்று கூறுவதில் தவறில்லையல்லவா? இச்சிறு காய்கள் முயல்களின் விழிகள் போன்று இருக்கும் என்று வடிவம் குறித்தார். அகநானூற்றில் இடைக்காடனார். [1] பாலை நிலத்தில் இக்காய்கள் உதிர்ந்து கிடக்கும் என்ற செய்தியை அகநானூறு விளக்கும். [2] காட்டில் மேய்க்கும் தொழிலையன்றி வேறுகல்லாத சிறுவர்கள் இந்நெல்லிக்காய்களை வட்டாகஅமைத்துக் கொண்டு கட்டளையன்ன அரங்கு விளையாடுவார்கள் என்கிறது நற்றிணை. [3]

நெல்லிக்காயைத் தின்றுவிட்டு மேலே சிறிது தண்ணீர் குடித்தால், ஆ! அதுதான் எத்துணைச் சுவையினது! அதன் சுவை சொல்தலும் தரத்ததன்று இச்சுவையை நற்றிணை எழுதிக்காட்டுகிறது. சோலைவழி தலைவனோடு நடந்தாள் அவள். நெல்லியஞ்சோலையிலே உதிர்ந்த கடைதிரண்ட நெல்லிக்காய்களை ஒருசேரத் தின்றாள். பின் வறந்த சுனை நீரைப் பருகிச் சென்றாள் என்பது அக்கருத்தாகும். [4] இதே சுவையினை மாற்றூர் கிழார் மகனார் கொற்றங் கொற்றனார் என்ற புலவர் அகநானூற்றிற் பாடியுள்ளார். தலைவியின் மொழியினிமைக்கு உவமை கூற விழைகின்றான் தலைவன். நெல்லிக்காயை தின்றவர்கள் பின்பு தண்ணீர் குடித்தால் எய்துகிற இனிமையைப் போன்ற இனிய மொழியைத் தலைவி பேசுவாள் என்பது அவள் முடிவு. எத்தகைய சுவை பயப்ப கவிஞர் இதனைப் பாடியுள்ளனர்? இதுவன்றோ தமிழ்ப் பாடல்!

"புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்
நீர்குடி சுவையின் தீவியமிழற்றி" (அகம்—54)

---

1. சிறியிலை நெல்லிக் காய்கண்டன்ன
குறுவிழிக் கண்ண கூரலங் குறுமுயல்" (அகம் 284)

2. "பளிங்கத்தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறையீட்டு வட்டேய்ப்ப
உதிர்வன படூஉம் கதிர் தெறு கவான்" (அகம்—5)
"சிறியிலை நெல்லித் தீஞ்சுவைத்திரள்காய்
உதிர்வன தாஅம் அத்தம்"

3. "கட்டளையன்ன வட்டரங்கிழைத்துக்
கல்லாச்சிறார் நெல்லிவட்டாடும்" (3)

4. "சுவைக்காய் நெல்லிப் போக்கரும் பொங்கர்
வீழ்கடைத் திரள்காய் ஒருங்குடன் தின்று
வீசுனைச் சிறுநீர் குடியினள் கழிந்த
குவளை உண்கண் என் மகளோர்" (தொடரும்)

கரந்தைப் புலவர் கல்லூரி நிகழ்ச்சிகள்.

கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர் இளங்கோவடிகள் தமிழ்க் கழக 19-ஆம் ஆண்டுவிழா 24—2—57ல் சங்கப் பெருமன்றத்தில் அருட்டிரு. குன்றக்குடி அடிகளார் தலைமையில் சிறப்புற நிகழ்ந்தது. இறை வணக்கத்திற்குப்பின் கழக மாணவர்களால் "தமிழ் வளர்ந்த கதை" என்னும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

அடிகளார் 'புகழ்பூத்த வாழ்வு' என்ற தலைப்பில் மறைந்த குமரிக் கண்டத்தில் வாழ்ந்த பழந்தமிழர் சமயம் மொழி வாழ்வு என்ற துறைகளில் உலகிற்கு வழிகாட்டியவர்களாக நாகரிகத்தாலும் பண்பாட்டினாலும் புகழ்பூத்து விளங்கிப் பின்னர் வந்த வேற்றவர் நாகரிகக் கலப்பால் ஒற்றுமையின்மை விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இன்மை உழைப்பின்மை ஆயவற்றால் நலிவுற்றனர் என்றும், ஆரிய நாகரிகத்தாலும் பௌத்த சமண சமயங்கள் வற்புறுத்திய கடுந்துறவாலும் தமிழகத்தின் பண்பாடும் சமய வாழ்வும் கெடாமல் தங்கள் இலக்கியங்களின் வாயிலாகக் கம்பரும் சேக்கிழாரும் புரட்சி செய்து புதுவழி காட்டினார்கள் என்றும், கூறினார்கள். மேலும் எல்லாத் துறைகளுக்கும் வழிகாட்டிய வள்ளுவர், ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு, பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம் நயனுடையான் கட்படின். மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம் பெருந்தகையான் கட்படின் என்ற குறட்பாக்களில் ஒப்புரவாளர்களைத் தன் வளர்ச்சியும் புகழும் கருதிச் செய்பவன் விருப்பு வெறுப்பின்றிக் கடமை என உணர்ந்து செய்பவன் இன்ப துன்பத்தை வென்று அருளால் செய்பவன் என மூவகையாகப் பிரித்து நீரை எடுக்காவிடின் சுருங்கிப் பாசி படர்ந்து தூர்க்கப்படும் ஊருணி, நடுவூரில் பழுத்துதிரும் பழுமரம், தம்மைச் சிதைப்போர்க்கும் நன்மை செய்யும் தப்பா மருந்து மரம் ஆகிய உவமைகளால் முறையே பேரறிவுடையானையும் உள்ளமுடையானையும் அருளுடையானையும் உணர்த்தும் திறனை நுண்மாண் நுழைபுலத்தாற் கண்டு தெளிய வேண்டுமென்றும், தூய வாழ்வும், தொண்டு மனப்பான்மையும் சமயப் பற்றுமே பழைய புகழ்பூத்த வாழ்வைத்தரும் என்றும் விரிவாகக் கூறினார்கள்.

பேராசிரியர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் தமிழாக்கம் என்ற தலைப்பில் தமிழ்மொழி மிகத் தொன்மை வாய்ந்ததென்றும், இலக்கண நெறி சிறந்த தமிழ்தான் எழுதாக் கிளவியாகிய ஆரியத்திற்கு நெடுங்கணக்கு முறையில் எழுத்துகட்கு வரிவடிவைக் காட்டி அது சமக்கிருத மொழியாக உலவ உதவியதென்றும், பேசா மொழியாகிய வடமொழிக்குத் தமிழ் நூற்றுக் கணக்கான சொற்களை வழங்கியுள்ளமை மொழிநூல் முறையின் ஆராய்வோர்க்குப் புலனாகும் என்றும் கூறினார்கள்.

மதிப்புரை.

கம்பராமாயணச் சுந்தரகாண்டம்
(இரண்டாம் பகுதி)

[அண்ணுமலைப் பல்கலைக் கழக வெளியீடு]

கம்ப ராமாயணச் சுந்தரகாண்டத்தின் இரண்டாம் பகுதி, இப்பொழுது வெளிவந்துளது. இதுவும் முன் பகுதிபோல் பயனுடையதாகும். இப்பதிப்பில், கம்ப ராமாயணப் பதிப்பாசிரியர் குழுவில் உள்ளார் சிலரும் கலந்து தொண்டு புரிந்திருப்பதாக இதன் முகவுரை முதலியவற்ருல் அறிகிருேம்.

பாக்களில் சொற்கள் பிரிக்கப்பெற்றும், எச்ச முடிபுகள் காட்டப்பெற்றும் கண்கவர் வனப்பினதாய் இது அச்சிடப் பெற்றுளது. பொருளாழமுடைய பல பாடங்கள் இதன்கண் இடம்பெற்றுள்ளன. எழுநூற்றெழுபது பக்கம் கொண்ட இப்பதிப்பு, முந்நூறுக்கு மேற்பட்ட பக்கங்களைப் பாட வேறு பாடு காட்டக்கொடுத்துள்ளது; எனினும், படிப்பார் தம்தம் ஆற்றலுக்கேற்ற வகையில் இவர்களால் புறக்கணிக்கப்பெற்ற பாடங்கட்குப் புதுப்பொருள் காணலாமன்ருே? அதற்கு இம் முறை, தக்க பயன் அளிக்கும் என எதிர்பார்க்கிருேம்.

சில படலங்களின் தலைப்பில் புதிய முறையில் சில விளக்கக் கருத்துக்கள் தரப்பெற்றும், வான்மீகத்திற்கும் இதற்கும் உள்ள

(377-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சங்கீதம், ப. சுந்தரேசன் அவர்கள் பாணர்கள் பயிற்றுவித்த இசைமுறை என்ற தலைப்பில் பண்டு இசையை எந்தப் பண்ணிலிருந்து தொடங்கிக் கற்பித்தார்கள். அதற்குக் காரணமென்று என்பதுபற்றி அழகுற விளக்கினர்கள். (சொற்பொழிவின் சுருக்கம் பின்னர்ப் பொழிலில் வரும்)

துணைத்தலைவர் நன்றிகூறச் சங்க வாழ்த்துடன் விழா இனிது நிறைவேறியது.

மறுநாள் 25—2—57 மாலை 9 மணியளவில் திருவாளர், ஆ. சக்கரவர்த்தி, B. A., அவர்கள் தலைமையில் அரண்மனைக் கலைக் கூட வெளியரங்கில் கல்லூரி மாணவர்களால் வித்துவான், ச. பாலசுந்தரம் எழுதிய ‘திருமாவளவன்’ என்ற வரலாற்று நாடகம் அழகுற நடிக்கப்பெற்றது.

பொழிற்றெண்டர்.

வேறுபாடுகள் விளக்கப்பெற்றும் இருக்கின்றன. அவைகள் படிப்பார்க்கு ஒருவகை எழுச்சியை உண்டுபண்ணக்கூடியனவாக இருத்தலின் அவற்றைப் படிப்பது இன்றி அமையாததாகின்றது. அவற்றுள் ஒன்று: "எவ்வளவு நெருக்கடியான நிலையிலும் செய்யவேண்டிய முறைகளைத் தவறாமல் செய்யவேண்டும் என்பது, இந்திரசித்து நான்முகன் படையை முறையாக உள்ளத்தால் செய்த வழிபாட்டைக் கூறும் செய்யுளில் அழகாகவும் தெய்வ உணர்ச்சியோடும் அமைந்திருக்கின்றது. போரின் பயன் மாற்றானைத் தொலைத்தல் என்ற வான்மீகத்தின் கருத்தை ஒரு வகையாக மாற்றிப் போரின் பயன் புகழைக் காப்பாற்றலே என்று இந்திரசித்துக்கொண்டதாக இப்படலம் கருதவைக்கிறது" என்ற இப்பகுதியும் ஏனையவும் இப்படலத்தின் குறிப்புரை ஆசிரியர்க்கு இயற்கையாக உள்ள நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுகின்றன.

சில பாட வேறுபாடு: பஞ்ச சேனுபதிப் படலம் முதற் செய்யுளில் "போரிடைக்கட்புலன் கடுங்கனல் கதுவ" "ஒழுக்கற்ற ஒக்க" என்ற பாடங்கள் பலவகையில் பெருவழக்காக இருப்பினும் "போரில் நின்கட்புலக் கடுங்கனல்கதுவ" "ஒழுக்கற்ற ஒழுக்கு" எனப்பாடங்கொண்டு சிறந்த பொருளும் கூறப்பெற்றுள்ளது. பிணிவீட்டுபடலம் 81-அம் செய்யுளில் "இடர்துடைத்து ஏகவிண்டுப் பிறந்தனன் (விண்டு—விஷ்ணு) என்பதினும் "ஏகஈண்டுப் பிறந்தனன்" என்ற பாடமே சிறந்தமை கருதி அமைக்கப்பெற்றுள்ளது. இதற்கு அடி "ஆதியம் சோதி உருவை அங்கு வைத்து இங்குப் போந்த" என்ற திருவாய்மொழியாம். அது நினைவிலிருந்தாலன்றி இப் பாடங்கொள்ள இயலாது. இங்ஙனமே பல நல்ல பாடங்களும், படிப்பாரைத் தூண்டும் புது முறைகளும் இப்பதிப்பில் கையாளப் பட்டிருக்கின்றன. மேலும் சொல்லாராய்ச்சிமுறையிலும் சில சொற்களுக்கு விளக்கம் தரப்பெற்றுள்ளன. இங்ஙனம் நல்ல பதிப்பு வெளிவரச் செய்த பல்கலைக் கழகத்தாரைப் பாராட்டுவோமாக.

வாழ்க தமிழ்! வாழ்க கம்பன் வாய்மொழி!!

வித்துவான். மு. சடகோபராமானுசம் பிள்ளை.

"சிலப்பதிகாரத் திசை நுணுக்க விளக்கம்"

திரு. வீணை வித்துவான், **S. இராமனுதன் அவர்கள்.**

நூல் கிடைக்குமிடம் :- 20, சைடோஜித்தெரு, கலைமகள் இசைக்கல்லூரி, திருவல்லிக்கேணி, சென்னை—5.

தற்காலத் தமிழ்நாட்டு இசைமுறையில் சிறப்பான இசைக் கருவி, வீணைக் கருவியேயாகும். இதனைப் பயின்ற திரு. S. இராமனுதன் அவர்கள், பழைய இசைக் கலைக்கு இடமாகிய சிலப்பதிகாரத்தை ஆராய்ந்து தனது உள்ளத்தில் தோன்றிய பல கருத்துக்களைக் (இசைபற்றி) கூறவேண்டி ' சிலப்பதிகாரத் திசை நுணுக்க விளக்கம்'' எனும் பெயரால் உடனே நூல் வடிவாக்கியது மிகவும் பாராட்டக்கூடியதேயாம். வீணைக் கருவியை நன்கு பயின்ற இராமனுதன் அவர்கள் தமிழிசை ஆராய்ச்சியில் ஈடுபட மனமுவந்து வந்ததை தமிழ் நாடும், தமிழ் மக்களும் நன்கு வரவேற்றுப் பயன் காண்பாராக.

இந்நூலுக்குத் தற்காலத் தென்னிந்திய வாய்ப்பாடகர்களில் ஒருவரான முடிகொண்டான் வேங்கடராமையர் அவர்களும் மதிப்புரை எழுதியுள்ளார்கள். அம்மதிப்புரையுள் உள்ள ஒரு பகுதி வருமாறு,

"சிலப்பதிகாரத்தில் சங்கீதத்தைப்பற்றி சொல்லியிருக்கும் காதைகளில் நான் பார்த்து அறிந்தவரை அதிலுள்ள இசையின் அடிப்படையான இலக்கணமானது தமிழ் மொழியில் இருப்ப தற்கென எந்த விதத்திலும் வேறுபாடு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

எந்த மொழியில் எழுதப்பட்டிருந்தாலும் சாத்திரம் ஒன்றுகவே இருக்கிறது.

தமிழ் மொழியில் இருப்பதற்காக சாத்திரம் வேருகவும் வட மொழியில் இருப்பதற்காக சாத்திரம் வேருகவும் இல்லை என்பது நிதர்சனமாகும்.

மொழிகளுக்கென்று கலை வித்தியாசப் படுவதாகக் காணேம்'' என்பதாம்.

மேலே கூறப்பட்டுள்ளவை யாவும் மிகப் பிற்காலத்திய சங்கீத வித்துவான்கள் கொண்டகருத்தாகும். ஆதலால் தற் காலத்தவர் கூறுவதில் வியப்பொன்றுமில்லை.

நூலாசிரியரான இராமநாதன் அவர்களுக்கு மிகவும் துணை புரிந்தவர் சென்னை விவேகானந்தர் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் சி. ஜெகந்நாதாசார்யர் அவர்கள் என்பது மதிப்புரையாலும் முகவுரையாலும் நன்கு விளங்குகின்றது. இவர் பாயிரம் ஒன்று தந்துள்ளார்.

நூலுக்கு, நூலை இயற்றிய இராமநாதன் அவர்கள் நல்ல தமிழ்மொழிப் பற்றோடும் இசைத்தமிழ்பற்றி ஆராய்ந்த பெரியோர்களுக்கு நன்றியறிதலோடும் முன்னுரை எழுதியுள்ளார்.

நூலில் இசைத் தமிழின் தொன்மையை முறையே கூறி, தேவாரப் பண்களையும் நினைந்து "தமிழிசைச் சங்கத்தினர் (சென்னையில்) ஓதுவார்களையும் இசை வல்லுநர்களையும் கொண்டு சில ஆண்டுகளாக நடத்திவரும் பெருந்தொண்டாகிய பண் ஆராய்ச்சியினால் பல அரிய பொருள்களைத் தெரியலானேன்" எனவும், "ஒரே பண்ணை இருவர் இரண்டு வகையாகப் பாடிக்காட்டியதும் உண்டு; இவற்றுள் ஒன்று மரபு மாறி வந்திருக்குமன்றோ? இவ்வகையில் எழும் ஐயத்தை நீக்கக்கூடியது, நூலாராய்ச்சியே எனத் துணிந்தேன்" எனவும் கூறி சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையில் பற்றுகொண்டு ஆராய்ச்சியில் ஈடுபடுகிறார். சிலப்பதிகாரத்தில் கூறியவற்றையெல்லாம் நன்கு கூறி வருகிறார். மேற்கோட் சூத்திரங்களையும் எடுத்துக்காட்டி கூடியவரை விளக்கம் தந்துள்ளார். அவ்விளக்கங்களில் வட்டப்பாலையை எடுத்துக்கொண்டு "சரிகமபதநி என்ற குறியீடுகளில் அவற்றை நிறுத்திக் காட்டுவோம்" எனக் கூறி, "குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற ஏழு நரம்புகளும் சரிகமபதநி என்பதற்குச் சான்று அடியார்க்கு நல்லார் உரையினாலும் வேறு வகையினாலும் காட்டி விளக்கத்தைத் தொடர்வோம்" எனக்கூறுகிறார்.

இங்கே அரங்கேற்று காதையில் அடியார்க்கு நல்லார் குழற் கருவியின் (இளிக்கிரமத்திற்கு) இலக்கணம் கூறுவதையெல்லாம் காட்டி குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்—இவ்வேழும், சட்ஜம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம் என்ற ஏழு சுரங்களே எனத் தெளிவாகக் கூறுகிறார். மேலும் அடியார்க்கு நல்லார் கூறுவதையெல்லாம் கூறி, குரல் குரலாய செம்பாலையின் அலகுகளையும் கூறி, இளிநரம்பின் பெயர்க்காரணங்களையும் கூறி, செம்பாலை என்பது இக்காலம் 28-வது மேளமாகிய ஹரிகாம்போதி என்று வலியுறுத்துகிறார்.

குரல் முதலாகவுள்ள இப்பாலையின் அலகுகள் (இசையின் பிறப்பு முறைகளைக் காட்டி) இளிக்கிரமத்தில் 4—4—3—2—4—3—2 எனக்காட்டி முதலில் தோன்றிய நரம்பு தாரமேயாகும் எனக் கூறியுள்ளார். **நினைவுபடுத்துதல், ஏழுபாலையிசைகள்** என்னும் பகுதிகளில் நல்ல விளக்கம் தந்துள்ளார். இவை யாவும் நன்கு போற்றுதற்கு உரியனவாகவும், பாராட்டக்கூடியதாகவும் உள்ளன. ஆனால் அலகுகளைப்பற்றிய தோற்ற முறைகளை நன்கு விளக்கவில்லை.

மேலும் பாலையாழ் என்னும் பெரும்பண்ணும் செம்பாலை என்ற பாலையும் ஒன்றுதான் எனக்காட்டுகின்றார். பிறகு மாத்திரைகள் மாறுதல் செய்வதால் ஏற்படும் மாற்றத்தினை அடியார்க்கு நல்லார் கூறும் சூத்திரத்தைக் கொண்டு தொடங்குகிறார். தொடங்கும் தொடக்கம் குரலுக்கடுத்த துத்தமிருந்து தொடங்கவேண்டியதை குரலுக்குக் கீழுள்ள தாரமிருந்து தொடங்கி துத்தம் குரலாய படுமலைப் பாலையென்பது பொருந்தவில்லை. விளக்கம் என்ற பகுதியில் படுமலைப்பாலையின் துத்தம் செம்பாலையின் குரலாகும் எனக்கூறுவது ஐயப்பாட்டினைத் தோற்றுவிக்கின்றது.

அதாவது நூலில் பக்கம் 25-ல் விளக்கம் என்றவிடத்துப் படுமலைப் பாலையின் துத்தம் செம்பாலையின் குரல் எனக் கூறுகிறார். காரணம் இங்கு முதலிசையாக இருக்கவேண்டிய துத்த இசையை குரலுக்குக் கீழுள்ள தாரத்தில் நிறுத்தியதற்காகவோ என்னவோ அறியக்கூடவில்லை. ஆனால் குரலுக்கு மேலுள்ள துத்தம் என்ற இசையே நரம்பு மாறுபாட்டினால் குரலாகின்றது. ஆதலால் படுமலைப் பாலையின் துத்தம் செம்பாலையின் குரல் என்று கூறுவதைவிட செம்பாலையின் துத்தம் படுமலைப் பாலையின் குரலாகும் எனக்கூறி இருக்கவேண்டும். என இந்நூலைப் படிக்கும் இசைப் புலவர்கள் கூறுவார்கள் எனத் தோன்றுகின்றது. நிற்க நூல் முழுதும் ஏற்கனவே, இசை நுட்பம் அறிந்தார். உணரத்தக்க நிலையில் இருப்பதால் கற்போருக்கு இவ்வாறு தோன்றக்கூடும்.

இக்கருத்து ஆசிரியரின் உள்ளத்திலும் தோன்றியதால் ஐயமும் தெளிவும் என எழுதி "செம்பாலையின் துத்தம் படுமலைப் பாலையின் குரலாயது என்று பொருள் கொள்ளக் கூடாதோவெனின் அற்றன்று. கொள்ளக் கூடாமையின் காரணங்களைக் கீழே கூறுவோம்." என எழுதியுள்ளார். அலகு அட்டவணையும் எழுதியுள்ளார். பிறகு முன்னதன் குரல் முத

லிய ஏழும், பின்னதன் துத்தம் முதலிய ஏழும் அலகுநிலை ஒத்து நிற்றலையும் காணலாம் எனத் தெளிவாகக் கூறியிருக்கின்றார். இதுவரை செம்மையாக எழுதியிருப்பதை நன்கு பாராட்டவேண்டும். ஆனால் காட்டப்பெறும் காரணங்கள் தெளிவாக இல்லை.

அதாவது "குரல் குரலாயது செம்பாலை யென்றமையாமல் பாலையாழின் குரலும் செம்பாலையின் குரலும் ஒத்திருக்கும் என்றாயிற்று. ஆகவே துத்தம் குரலாயது என்று கூறும்போது செம்பாலை என்று பொருள் கோடல் நேரிது" எனக் கூறுவது எவ்வகையில் பொருந்தும் என ஐயப்படுவதோடன்றி இங்கு கூறப்படும் இசை முறைகளுக்கு அடிப்படையின் தோற்றமும் அதன் வரன் முறையும் நூலைக் கற்போர்க்கு எவ்வாற்றானும் விளங்கிக்கொள்ளமுடியாத நிலை ஏற்படக்கூடியதாக இருக்கின்றது. இசை முறைகளையும் மாத்திரைகளையும் நன்கு செவ்வையாக விளக்கியிருந்தால் நலமாக இருக்கும். பின்னர், ஒவ்வொரு பாலையாக ஆசிரியர் தம் கருத்துப்படி விளக்கம் தந்து ஆய்ச்சியர் குரவையில் அடியார்க்கு நல்லார் (உரையில்) காட்டும் பாலைகளை நிறுவி செம்பாலை — இக்காலத்து ஹரிகாம்போதி எனவும் படுமலைப்பாலை—கல்யாணி இராகம் எனவும் செவ்வழிப்பாலை—தோடி எனவும், அரும்பாலை கரகரப்ரியா எனவும் கோடிப்பாலை சங்கராபரணம் எனவும், விளரிப்பாலைக்கு இராகம் கூறாமலும், மேற்செம்பாலை நடபைரவி எனவும் கூறியுள்ளார். இங்கே குரல்—சட்ஜம் எனவும், துத்தம்-ரிஷபம், கைக்கிளை—காந்தாரம், உழை—மத்திமம், இளி—பஞ்சமம், விளரி—தைவதம் எனக் கொள்வது ஐயப்பாடுடையதாகும்.

இசையாராய்ச்சி என்பது முறைப்படி எவ்வாறிருக்க வேண்டுமென்றால் முதலாவது ஒன்றிலிருந்து தொடங்கினால் முறையே இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என வழக்குப்படி

கையறவு.

கரந்தைத் தமிழ்ச்சங்க உறுப்பினரும், தஞ்சை வர்த்தக பாங்கிச் செயலாளருமான **திரு. K. விசுவநாத பிள்ளையவர்கள்** 18-3-57 அன்று மறைந்தமை கேட்டு வருந்துகிறோம் அன்னாரின் பிரிவாற்றாது துயருறும் அவர் மனைவியாருக்கும் மற்ற உறவினர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பொழிற்றொண்டர்.

செல்வதே சாலப்பொருத்தம் உடையதாகும். ஆதலால் ஒரு ஆராய்ச்சியின் கருத்துகளை தோற்றுவாயைக் கொண்டே நன்கு விளக்கம்பெற நமக்கு நாமே ஐயமறத்தெளிந்து கோடல் வேண்டுமென பெரியோர்கள் கூறுவது வழக்கம். மதிப்புரை தந்துள்ள முடிகொண்டான் இசைப் புலவர் கூறுவதுபோன்று (அதாவது "தமது நூலைப் படிப்பவர்கள் முன்னமேயே இசைக் கலையில் ஓர் அளவிற்கு நன்ருகப் பயின்றவர் என்று கொண்டும் அறிந்துகொள்ளக் கூடும் என்று மதித்துமே அத்தரத்திற்குத் தக்கவாறு நூலை எழுதியுள்ளார்போலும்!) என்று கூறுவதற்கு இணங்க இருப்பதால் படிப்போர்க்கு எளிதில் 'விளக்கம்பெருது' போகலாம் எனவும் எண்ணவேண்டியிருக்கிறது.

நூலில் அரங்கேற்று காதைப்பற்றியும், வேனிற்காதையில் வட்டப்பாலையின் இடமுறைத்திரிபுபற்றியும், உரை ஆசிரியர் களின் மேற்கோள்களைக்கொண்டும் தன் கருத்துப்படியும் தொடர்ந்து ஆராய்ந்த முடிபுகளை எழுதி பிறகு ஆய்ச்சியர் குரவையின் தொடர்ச்சியாக, கருத்துகள் எல்லாவற்றையும் எழுதி முல்லைப்பண் இக்கால மோகன இராகம் என்று தெளி வாகின்றது எனவும், சிலப்பதிகார ஆதாரங் காட்டியே விளக்கி, சேக்கிழாரருளிய ஆனய நாயனுர் புராணத்தில் ஒரு செய்யுளையும் எடுத்துக்காட்டித் திருவாசகம் மோஹனராகத்தில் ஓதப்பெற்று வருகிறது என்று ஈண்டு நினைவில் கொள்ளவேண்டும் எனவும் சான்றுகள் காட்டி நிறுவுகின்ருர்.

பக்கம் 69-ல் வட்டப்பாலையில் காணவேண்டிய நுணுக்கங் கள் எனும் பகுதியின் தொடர்பாகவும் சில கருத்துக்களை விளக்குகிருர். அரும்பாலையும் சட்சக்கிராமமும் என்னும் பகுதியில் இளி குரலாய அரும்பாலையின் நரம்புகளுக்குரிய மாத்திரை வருமாறு என அடைவே மாத்திரைகளைக் காட்டி, பரத முனிவர் நாட்டிய சாத்திரம் எனும் வடநூலுள் சட்சக் கிராமத்திற்குரிய மாத்திரைகள் கூறும் பகுதியையும் காட்டி,

"சட்சம், மத்திமம், பஞ்சமம் ஆகிய சுரங்களுக்கு நான்கு சுருதிகளும். ரிஷபம், தைவதம் ஆகியவற்றிற்கு மூன்று சுருதி களும். நிஷாதம், காந்தாரம் ஆகியவற்றிற்கு இரண்டு சுருதி களும்" கூறினர் = எனக் காட்டியிருப்பதில், நன்கு நோக்கு மிடத்து பண்டைய இளி எனும் இசையே பிற்காலத்தில் ஷட்ஜம் எனப்பட்டது எனும் உண்மை நன்கு புலனுகின்றது.

ப. சுந்தரேசன்.

(தொடரும்)